# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 ஆகஸ்ட் 2002 இதழ் - 8



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

✆ 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தாமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை.ரூ.20/-

### தொடர்பு முகவரி

தமிழ் உலக ஆத்துமா ஆதாயத் திட்டம்
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.


## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | கருத்தரங்கம் | 10 |
| 3. | கிறிஸ்துவின் சபை எவ்வளவு காலம் ... | 11 |
| 4. | பெண்கள் பகுதி | 14 |
| 5. | சிறுவர் பகுதி | 17 |
| 6. | வாலிபர் பகுதி | 18 |
| 7. | விசுவாசத்தின் அடிப்படைகள் | 21 |
| 8. | மாற்கு ஒரு கண்ணோட்டம் | 23 |
| 9. | வேதாகம காலத்தை போலவே | 24 |
| 10. | இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை | 28 |

# THIRUMARAI AASAAN

**Published by Chruch of Christ**

Editor
*S. RAJANAYAGAM*

Honorary Editor
*J.C. CHOATE*

**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India.**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol.15 August - 2002 Issure- 8**

ஆசிரியர் உரை

# "எபூசியனாகிய அர்வனா"

பொதுவாக, நம் எல்லோருக்குமே ஒரு மாறாப் பிரமாணம் உண்டு. அது, நாம் பார்க்கின்ற எல்லோரையும் சம நோக்கில் பார்க்க மறுப்பது அல்லது நாம் பழகுகின்ற எல்லோரிடமும் சம அளவில் பழக விரும்பாதது அல்லது நாம் படிக்கின்ற எல்லோரையும் சம அந்தஸ்தில் வைத்து கற்றுக்கொள்ள முயற்சிக்காதது. எல்லோரையும் சம அளவில் நடத்துவது நடைமுறைக்கு சாத்தியமானதல்லவென்பது உண்மையாக இருந்தாலும் கூட, மிகப்பெரிய அளவில் பாரபட்சம் காட்டுவது மாத்திரம் எப்படி நியாயமாகி விடும்? ஒரு வேளை உலகத்திலும், நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்திலும், நாம் அப்படிப்பட்டதோர் அணுகுமுறையை நிர்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொண்டாலும், நாம் அதே அணுகுமுறையை வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மனிதர்கள் விசயத்திலும் கடைப்பிடிப்பது, எவ்வகையில் நீதியாக இருக்குமென எனக்கு விளங்கவில்லை. ஆனால், இத்தவறைக் கிறிஸ்தவ சமுதாயம், ஆரம்ப முதலே, சத்தமில்லாமல் செய்து வருகிறது.

ஒருவேளை, நாம் அறிந்து பின்பற்றுவதற்கான முன் மாதிரி, வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள முன்னோடிகளிடம் தான் அதிகமாக இருக்க முடியுமென்கிற உங்கள் சத்தான வாதத்தை நானும் அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக மற்றவர்களிடம் எதுவுமே இருக்காது என்று எண்ணி, அப்படியே, அம்போ என்று விட்டு விடுவது சரியான ஒன்றாக இருக்குமா? பெரும்பாலானவர்கள் நினைப்பது போல், அவர்களிடம் கற்றுக் கொள்வதற்கு அதிகமாக எதுவுமே இருக்காது என்றே வைத்துக்கொண்டாலும், அவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதற்கு ஒன்று கூடவா இல்லாமல் போய்

விடும்? கண்டிப்பாக அப்படியிருக்காது. அப்படியிருந்தால், வேதாகமத்தின் பக்கங்களில் அவர்கள் ஏன் எடுப்பாகத் தெரிய வேண்டும்?

ஆகவே தான், கடந்த எட்டு ஆண்டுகளாக, ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதங்களில் வேதாகமத்தைப் படிக்கின்ற பலரால், முக்கியமில்லாதவர்கள் அல்லது கற்றுக் கொடுக்கத் தகுதியற்றவர்கள் என்று எண்ணி ஒதுக்கப்பட்ட பலரை, வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து, இவர்களும், நமக்கு கற்றுக்கொடுப்பதற்கு லாயக்கானவர்களே என்று எடுத்துக்கூறி வந்துள்ளேன். கிட்டத்தட்ட அவர்களனைவரும் நம்மவர்களால் ஓரங்கட்டப்பட்டிருக்கிறவர்களே. அவர்கள் யாரென்பதை நீங்கள், மீண்டும் மறந்திருக்க வாய்ப்புள்ளதால், இன்னுமொருமுறை உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

1. வீரத்தின் விளைநிலமாய் வாழ்ந்த நெஞ்சுரம் கொண்ட ''சம்மா''. (2.சாமு. 23:11,12)
2. பார்வையற்ற மனிதனாகிய ''பர்திமேயு'' (மாற்கு 10:46,58)
3. பவுலடியாரின் காலத்தில் வாழ்ந்த ''ஒநேசிப்போரு'' (2.தீமோ.1:16-18)
4. சமாரியாவிலுள்ள ''சீகார் ஊரார்'' (யோவா.4:1-3)
5. யோவானால் மெச்சப்பட்ட ''காயு'' (3.யோவான் 1-6)
6. திமிர்வாதக்காரனைச் சுமந்து வந்த ''நாலுபேர்'' (மாற்கு 2:3)
7. பவுலின் ஊழியத்தோடு தொடர்பு கொண்ட ''தீகிக்கு'' (எபே.6:2)
8. தலை சிறந்த தேவ மனிதனாகிய ''எப்பாப்பிரா'' (கொலோ. 1:7, 4:12)

இவ்வரிசையில் ஒன்பதாவது நபராக இருக்கும்படி இம்மாதம் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பவர் அல்லது தேடி கண்டு பிடிக்கப்பட்டிருப்பவர் ''எபூசியனாகிய அர்வனா''

இந்த எபூசியனாகிய அர்வனாவை எத்தனை பேருக்குத் தெரியும், சொல்லுங்கள் பார்க்கலாம்? ஊத்ஸ் தேசத்தானாகிய யோபுவை மிக நன்றாக தெரியும் (யோபு. 1:1)திஸ்பியனாகிய எலியாவை மோசமில்லாமல் தெரியும் (1. இராஜா.17:1) அரிமத்திய ஊரானாகிய யோசேப்பை (மத்.27:57) கேள்விப்பட்ட மாதிரி இருக்கும். ஆனால், எபூசியனாகிய அர்வானவை? கனவிலே கண்ட மாதிரி கூடத் தெரியாது. அப்படித்தானே! கிட்டதட்ட 20 வருடங்களாக நாடுகள் பல சுற்றி நற்செய்தி அறிவித்து வருபவரும், உலகின் தலைசிறந்த பிரசங்கிகளில் ஒருவர் என்று மதிக்க தக்கவரும், வேதாகமத்தை ஆராய்ந்து படிப்பதில் தேறினவருமான ஒரு மூத்த சகோதரரிடத்தில், நாம் பார்க்க இருக்கும் ''அர்வனா'' பற்றிக் கேட்டேன். அவராலேயே, யார், இந்த அர்வனா என்று சொல்லமுடியவில்லை. அப்பொழுதே, நினைத்தேன். இவன் எல்லோருக்கும் ஒரு புதிராகவே இருப்பான் என்று. இவன் வேதாக மத்தின் பக்கங்களில் ஒளிந்திருப்பவன் என்பதைவிட, வேத வசனங்களுக்குள்ளாகப்

புதைந்து கிடப்பவன் என்பதுதான் சரியாக இருக்கும். புதைந்து கிடக்கும் இவனை, எல்லோருமாகச் சேர்ந்து தோண்டிப் பார்த்து விடலாமா?

எபூசியனாகிய அர்வனா பற்றி பழைய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் உள்ளது. (II.சாமு. 24:15-25; I.நாளா.21:18-28;I.நாளா:3:1). அவன் பற்றி ஒருமுறை சொல்லப்பட்டதே இன்னொரு இடத்திலும் திரும்பச் சொல்லப்பட்டுள்ளது. சாமுவேலில் "அர்வனா" என்று அழைக்கப்பட்டுள்ள இவன், நாளாகமத்தில் ஓர்னான் என்று எழுதப்பட்டுள்ளான். இவை தவிர மேற்கொண்டு எந்த விவரமும் நமக்குக் கிடைக்கவில்லை. இவன் பற்றி, தெரிந்து கொள்ள நாம் முயற்சிக்காமல், தோண்டிப்பார்க்க முடிவெடுத்திருக் கிறபடியால், கிடைத்தவைகளைக் கொண்டு இறங்கிப் பார்ப்போம்.

அதற்கு முன்பாக, வழக்கம் போல், இவன் பற்றி சொல்லப்பட்டி ருக்கின்ற பகுதியின் பின்னணி பற்றி தெரிந்து கொள்வோம்.

இஸ்ரவேலின் புகழ்பெற்ற இராஜாவாகிய தாவீது, தன் இராஜ்ய பாரத்தின் உச்சத்தில் இருந்தபோது, தேவையில்லாத ஒரு காரியத்தை சாத்தானின் ஏவுதலாலே செய்தான். ஆம், ஜனங்களை இலக்கம் பார்க்க உத்திரவிடுகிறான் (2.சாமு.24:1,2). தனது நம்பிக்கைக்குரிய யோவாபும், இராணுவத் தலைவரும் இதற்கான தங்கள் எதிர்ப்பை நாசுக்காகத் தெரிவித்தபோதும், அதை அவன் காதிலே வாங்கிக் கொள்ளவில்லை. ஒன்பது மாதமும், இருபது நாளும் இலக்கம் பார்த்த பிறகு, இஸ்ரவேலிலே பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகர் எட்டு லட்சம் பேர் என்றும், யூதாவில் ஐந்து லட்சம் பேர் என்றும் கணக்கிடப்பட்டது. தன்னை முழுமையாகச் சார்ந்திராமல், தன் பலத்தை ராஜா கணக்கிட்டது, ராஜாதி ராஜாவாகிய தேவனுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஜனங்களை இலக்கம் பார்ப்பது தவறில்லை. தேவனே கூட, மோசேயைக் கொண்டு, இஸ்ரவேல் ஜனங்களை தொகை பார்த்தார். ஆனால், இங்கே, தாவீதின் நோக்கம் சரியில்லாமல் இருந்ததை தேவன் கண்டார்.ஆகவே, தன்னுடைய நீதியின்படியாக தாவீதைத் தண்டிக்க முடிவெடித்தார். ஞானதிருஷ்டிக் காரனாகிய காத்தைக் கொண்டு பேசி, மூன்று தண்டனைகளைப் பட்டியலிட்டு எதையாவது ஒன்றைத் தெரிந்து கொள் என்று ஆணையிடு கிறார். (II..சாமு.24:13)

அப்பொழுது, கர்த்தருடைய இரக்கங்கள் மகா பெரியது என்று அறிந்திருந்த தாவீது, மூன்று நாள் கொள்ளை நோய் தண்டனையைத் தெரிந்தெடுத்தான். மூன்று நாள் என்று அங்கே சொல்லப்பட்டாலும், கொள்ளை நோய் சில மணி நேரமே பாதிப்பை ஏற்படுத்தியிருக்கலாம் என்று வேத விற்பன்னர்கள் செல்லுகிறார்கள். அந்த சில மணிநேரமே எழுபதினா யிரம் பேரை பலிவாங்கிவிட்டது. தேவ கோபத்திற்கு முன்னால், யார் தான் நிற்க முடியும்? தாவீது, கர்த்தரை நோக்கி, "நான் தான் பாவம் செய்தேன்; இந்த ஆடுகள் என்ன செய்தது" என்று கெஞ்சி விண்ணப்பிக்கான் (24:17).

அப்பொழுது, கண்ணீரைக் காணும் நமது தேவன், ஞானதிருஷ்டிக் காரனாகிய காத்தின் மூலமாகப் பேசி, எபூசியனாகிய அர்வனானின் களத்தில் ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார். ( 24:18,19) அக்கட்டளையை நிறைவேற்ற தாவீதும், அவன் ஊழியக்காரரும் சென்ற போது, எபூசியனாகிய அர்வனா, ஏறிட்டுப் பார்த்து, எதிர்கொண்டு வந்து வணங்கி விசாரிக்கிறான். அப்பொழுது, தாவீது, ''வாதை ஜனத்தை விட்டு நிறுத்தப்பட,கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு இந்த களத்தை உன் கையிலே வாங்கிக் கொள்ள வந்தேன் என்றான்''. அதைக்கேட்ட அர்வனா, '' ராஜாவாகிய என் ஆண்டவன் இதை வாங்கிக் கொண்டு, தம்முடைய பார்வைக்கு நலமானபடி பலியிடுவாராக; இதோ தகன பலிக்கு மாடுகளும், விறகுக்குப் போரடிக்கிற உருளைகளும், மாடுகளின் நுகத்தடிகளும் இங்கே இருக்கிறது'' என்று சொல்லி, ராஜயோக்கியமாய் அவை எல்லாவற்றையும் ராஜாவுக்குக் கொடுத்தபின்பு, அர்வனா, ராஜாவை நோக்கி; உம்முடைய தேவனாகிய கர்த்தர், உம்மிடத்தில் கிருபையாயிருப்பாராக என்றான் (24:22,23). அக்களத்தை, தாவீது, இருபது சேக்கல் நிறை வெள்ளிக்கு வாங்கி, கர்த்தருக்கு ஒரு பலி பீடத்தைக் கட்டி, சர்வாங்க தகன பலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தினான். தேசத்துக்குச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டு, இஸ்ரவேலின் மேலிருந்த வாதையை கர்த்தர் நீக்கினார் (24:23).

சரி, இதிலிருந்து, இந்த எபூசியனாகிய அர்வனாவிடமிருந்து, நாம் கற்றுக்கொள்ள முடிகின்ற பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

**I. ''அர்வனா'' கர்த்தருக்காக எல்லாவற்றையும் விட்டான்** (வச.22)

எபூசியனாகிய அர்வனாவிடமிருந்து நாம் கற்றுக்கொள்கின்ற முதல் பாடம், கர்த்தருக்காக தியாகம் செய்யும் அரிய குணம் உடையவனாக் இருந்துள்ளான் என்பது.

ஆம், தாவீதின் இலக்கம் பார்த்த பாவத்தால், ஜனங்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது ராஜாவாகிய தாவீது, விடுபடும் வழி தெரியாமல் தேவனிடம் விண்ணப்பிக்கிறான். அப்பொழுது தான் சொல்லப்படுகிறது, எபூசியனாகிய அர்வனாவின் களத்திலே ஒரு பலிபீடம் உண்டாக்கு என்று.

ஏன் இந்த அர்வனாவின் களம் விசேஷமாகத் தெரிந்தெடுக்கப்பட்தென்று தெரியவில்லை. அங்கே, அரண்மனைக்குச் சொந்தமான ஏராளமான நிலங்களும், அவைகளுக்கான களங்களும் இருந்திருக்க வேண்டும். இன்னும் இஸ்ரவேலின் பிரபலங்களாக அன்றைக் கிருந்தவர்களின் களங்களும், தேவனுக்கு ஊழியம் செய்யும்படியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஆசாரியர்களின் களங்களும்இருந்திருக்க வேண்டும். ஆனால் அவை எதுவும் தேர்ந்தெடுக்கப்படாமல் அர்வனாவின் களம் தேர்ந்தெடுக்கப்பட்டது ஏன் என்பது அவருக்கே வெளிச்சம். ஆயினும், ஓர் உண்மை அங்கே தெரிகிறது. ''தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருப்பவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்

பண்ணுகிற தேவன்'' (II.நாளா.16:9) என்று சொல்லப்பட்டி ருக்கிறபடியால், அவருடைய கண்கள் உத்தம இருதயத் தோடிருந்த இவனைத் தேடிக் கண்டுபிடித்திருக்குமோ! அது அப்படித்தான் என்று, தொடர்ந்து வரும் காரியங்கள் உறுதி செய்கிறது.

தாவீது இந்தக் களத்தைப் பெற்றுக்கொள்ள வருகிறபோது, அர்வனாவாகிய ஓர்னான், தன்னுடைய நான்கு குமாரர்களுடன் போரடித்துக் கொண்டிருந்தாகவும்,தேவதூதனைக் கண்ட மாத்திரத்தில், அவர்கள் நால்வரும் ஒளிந்து கொண்டதாகவும் வசனம் கூறுகிறது.(II.நாள. 21:20) அவர்கள் ஓடி விட்டார்கள் என்று வசனம் சொல்லாதபடியால், அவர்கள் பக்கத்திலே தான் இருந்திருக்க வேண்டும். ஆயினும், அந்தக் களத்தை, தாவீது, தேசத்தின் வாதையினிமித்தமும், கர்த்தர் நிமித்தமும் கேட்டபோது, அர்வனா மறுபேச்சு பேசவில்லை. தன்னையும், தன் குடும்பத்தையும் பிழைக்க வைத்துக்கொண்டிருந்த நிலத்தையும், அதின் களத்தையும் மனமுவந்து கொடுக்க முன் வந்தான். அப்பொழுது, தன்னோடிருந்த குமாரர்களிடம் கூட ஆலோசனை கலக்க வேண்டுமென்று அவன் நினைக்கவில்லை. எப்படிப்பட்ட தியாகம் என்று பாருங்கள்!

அங்கே, அவன் கண்களுக்கு முன்பாக இரண்டே இரண்டு காரியங்கள் தான் தெரிந்தது. முதலாவது, அது கர்த்தருக்காகக் கேட்கப்படுகிறது, மறுப்புச் சொல்லக்கூடாதென்பது. இரண்டாவது,என்னால் தேசம் நன்மை பெறுகிறது, அதைச் செய்தே தீரவேண்டுமென்பது. இந்த இரண்டிற்காகவும், தன் ஜீவனத்திற்கான எல்லாவற்றையும் கொடுத்தான். தன் பிள்ளைகளுக்கான சுதந்திரத்தையும் சேர்த்து விட்டுக் கொடுத்தான். இந்த எபூசியனாகிய அர்வனா களத்தையும், நிலத்தையும் மாத்திரம் விட்டுக் கொடுக்காமல், மாடுகள், நுகத்தடிகள், உருளைகள் என்று அவனுக்கு என்னவெல்லாம் அங்கிருந் தனவோ அவை எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்தான். எதற்காக? தேசத்திற்காக! யாருக்காக? கர்த்தருக்காக! இவனின் இந்தச் செயல்பாடு. ''வா'' என்று அழைத்தவுடன், தன் தேசத்தையும், இனத்தையும், தகப்பன் வீட்டையும் விட்டு வந்த ஆபிரகாமையும், (அதி.12:1-7) உங்களை மனுஷரைப் பிடிப்பவர்களாக்குவேன் என்று சொன்னவுடன், உடனே எல்லாவற்றையும் விட்டு வந்த பேதுரு, (மத். 4:18-22),யோவான் போன்றவர்களையும் நினைவுப்படுத்தவில்லையா?

இதை வாசிக்கும் அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இந்த எபூசியனாகிய அர்வனாவோடு நம்முடைய நிலையை ஒப்பிட்டுப் பார்ப்போம். அர்வனாபோல் இன்றைக்கு எத்தனைபேர் கர்த்தருக்காக நம்முடைய தியாகம் செய்யத் தயாராயிருக்கின்றோம்? எத்தனைபேர் கர்த்தருக்காக நம்முடைய உரிமையை விட்டுக் கொடுக்கத் தயாராயிருக்கின்றோம்? அர்வனா தேசத்தின் நன்மைக்காக விட்டுக் கொடுக்க முன் வந்தது போல், நாம் அங்கமாக இருக்கும் சபைக்காக, சபையின் ஐக்கியத்திற்காக, சபையின்

ஆவிக்குரிய மேம்பாட்டுக்காக, சபைக்கு சமுதாயத்தில் கிடைக்கவேண்டிய மரியாதைக்காக, நம்முடைய நிலையை அல்லது உரிமையை விட்டுக் கொடுக்க எத்தனை பேர் தயாராக இருக்கிறோம்?

அர்வனாவின் தியாக மனப்பான்மையும், உரிமையைக் கூட விட்டுக் கொடுக்கும் எண்ணமும் இல்லாமல் சீரழிந்து கொண்டிருக்கும் சபைகளும், குடும்பங்களும், எத்தனையென்று உங்களுக்குத் தெரியுமா? புறஜாதியான் என்று கருதப்பட்ட, மெய்த் தேவனை முழுமையாக அறியாதவனென்று நம்பப்படுகின்ற இந்த அர்வனாவே 'கர்த்தர்'' என்று சொன்னவுடன் தன்னுடையதனைத்தையும் விட்டுக் கொடுத்திருக்கும் போது, தங்களை கிறிஸ்தவர்கள் என்றும், பரம்பரைக் கிறிஸ்தவர்கள் என்றும் உண்மைக் கிறிஸ்தவர்கள் என்றும், சொல்லிக்கொண்டிருக்கிறவர்கள், கர்த்தருக்காவும் அவருடைய சபைக்காகவும் தியாகம் செய்யாமலும், விட்டுக்கொடுக்காமலும், இருப்பது எப்படி நியாயமாகும்? இக்காரியத்தில் அர்வனா தரும் பாடத்தை நாம் தவறாமல் கற்றுக்கொள்வோம்.

## II. ''அர்வனா'' ராஜயோக்கியமாய்க் கொடுத்தான் (வச.23)

எபூசியனாகிய அர்வனாவிடமிருந்து, நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற அடுத்த பாடம், அவன் கர்த்தருக்காக ராஜாவிடம் கொடுத்ததை, ''கொடுக்க வேண்டிய பிரகாரம்'' கொடுத்தான் என்பது.

இதென்ன, '' கொடுக்க வேண்டிய பிரகாரம்'' என்று நீங்கள் கேட்கக் கூடும்? நியாயமான கேள்விதான். தன்னிடத்தில், ''களம்'' கேட்டு வந்த தாவீது ராஜாவுக்கு, தகன பலிக்கு, மாடுகளையும், விறகுக்குப் போரடிக்கின்ற உருளைகளையும், மாடுகளின் நுகத்தடிகளையும் கொடுத்தான் என்று வேதாகமம் சொல்லாமல், அர்வனா, ''ராஜயோக்கியமாய்'' அவை எல்லாவற்றையும் ராஜாவுக்குக் கொடுத்தான் என்று சொல்லுகிறது. மீண்டும், நீங்கள், இதென்ன ''ராஜயோக்கியமாய்'' என்றும் கேட்கவும் வாய்ப்புண்டு. இந்த ராஜயோக்கியமாய் என்ற வார்த்தை தமிழ் வேதாகமத்தில் தான் உள்ளது. ஆங்கில வேதாகமம் கொஞ்சம் வேறுபடுத்திச் சொல்லுகிறது. ஆயினும், நமது தமிழ் வேதாகமத்து வார்த்தை பொருள் பொதிந்ததொரு வார்த்தையாக இருக்கிறபடியால் அதை எடுத்துக் கொண்டேன்.

''ராஜயோக்கியம்'' என்பதைப் புரிந்து கொள்ள, என்னோடு எண்ணாகமத்திற்கு வாருங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திர யாத்திரையில் இருக்கும்போது, ஒருமுறை ஏதோமின் இராஜாவினிடத்திலும் (எண்.20;14-17), இன்னொரு முறை எமோரியரின் ராஜாவினிடத்திலும் (21:21,22), அவர்கள்தேசத்தின் வழியாகக் கடந்து போக அனுமதி கேட்கின்றனர். அந்த இரு சந்தர்ப்பங்களிலும், இஸ்ரவேலர் அவர்களுக்கு, இப்படியாக உத்திரவாதம் தருகின்றனர். அதாவது, ''நாங்கள் வயல்களிலும், திராட்சத் தோட்டங்களிலும் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், உமது எல்லையைக்

கடந்து போகுமட்டும் ராஜபாதையில் நடந்து செல்வோம் என்று அனுமதி கேட்டனர் (எண்.21,22). ஒருவேளை, ராஜாவுக்கென்று ஒரு தனிப்பாதை அந்நாட்களில் இருந்திருந்தாலும், அந்த பாதையிலே நாங்கள் போவோம் என்றா ஓசியில் கேட்பவர்கள் கேட்டிருப்பார்கள். அப்படியிருக்காது! பின்னே எப்படி? ''ராஜபாதை'' என்பதுதான் என்ன? அதாவது, எங்களை அனுமதித்து, நாங்கள் எப்படிப் போகவேண்டுமென்று ராஜா கட்டளையிடுகிறாரோ அந்த வழியாகக் கிரமமாகப் போவோம் என்றே அங்கே சொல்யிருக்கவேண்டும். அதுதான் அதன் பொருளாக இருக்க வேண்டும். ராஜாவின் வார்த்தைகளை மதிக்கின்ற பாதை, தாறுமாறாக நடக்காத பாதை, ராஜாவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுகின்ற பாதை, ராஜா திருப்தியடைகின்ற பாதையே அங்கே ''ராஜ பாதை'' என்று சொல்லப்படுகிறது.

இதே கருத்தோடு அர்வனா விஷயத்திற்கு நாம் வருவோமானால், ராஜயோக்கியம் என்ன என்பதின் பொருள் நன்றாக விளங்கும். அங்கே, அர்வான,ராஜாவுக்கு, தான் ஒன்றைக் கொடுக்கவேண்டிய தருணம் வந்தபோது, தான் இஷ்டத்திக்குக் கொடுக்காமல், ராஜாவுக்கு கொடுக்க வேண்டியதை எப்படி கொடுக்க வேண்டும் என்கிற முறையை அறிந்து, அதை ராஜா ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலும், அதில் ராஜா பிரியப்படக் கூடிய வகையிலும் கொடுத்துள்ளான் என்பது நன்றாகவே விளங்கும்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, தன்னுடைய ஜீவனத்துக்குண்டானவைகளை கேட்ட ராஜாவுக்கு, முகம் கோணாமல், ராஜா கேட்டதற்கும் மேலாக, ராஜயோக்கியமாய் அர்வனா கொடுத்திருக்கும்போது, நமக்கு ஜீவனையும், சுவாசத்தையும், ஆகாரத்தையும் நாளும் கொடுத்து நம்மை வழி நடத்துகிற (அப்.17:25)ராஜாதி ராஜாவாகிய தேவனுக்கு நாம் ஒன்றை கொடுக்கும் போது, அதை எப்படிக் கொடுக்க வேண்டுமென்பது இப்பொழுதாவது புரிகிறதா? எவ்வளவு பயமும், பக்தியும், கீழ்ப்படிதலும் தேவைப்படுகிற தென்று விளங்குகிறதா?

அப்படியானால், இது காறும் நாம் அவருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறவைகளை எப்படிக் கொடுத்துக் கொண்டுள்ளோம்? தேவ யோக்கியமாய், அதாவது தேவன் எதிர்பார்க்கிறபடி தேவன் பிரியப்படுகிறபடி கொடுத்துக் கொண்டிருக்கிறோமோ? சொல்லுங்கள். உதாரணமாக, காணிக்கையை எடுத்துக்கொள்ளுங்கள். இக்காரியத்தில் எத்தனைபேர், தேவன் பிரியப்படுகின்ற அளவில் கொடுத்து கொண்டிருக்கிறோம்? எத்தனைபேர், மனதில் ''நியமித்துக்'' கொடுத்துக் கொண்டிருக்கிறோம்? (II. கொரி.9:7) எத்தனை பேர் வாரத்தின் முதல் நாள்தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்? (I..கொரி.16:2)வேதபாரகர், பரிசேயர் என்பவர்களின் நீதியிலும் நம்முடைய நீதி அதிகமாயிருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறாரே, எத்தனை பேர் அவர்களைக் காட்டிலும் சிறப்பாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்? (மத்.5:20) எத்தனை பேர் மக்கெதோனியயரைப் போல் கொடிய தரித்திரத்திலும், உதாரத்துவமாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்? (II..கொரி.8:2 ) எத்தனைபேர் தேவன் மீது

நாம் கொண்டிருக்கிற அன்பின் உண்மை வெளிப்படத்தக்க அளவுக்கு கொடுக்கிறோம்? (II. கொரி.8:5) இந்த வசனங்களின்படி நாம் கொடுத்தால் தான், நாம் தேவயோக்கியமாய் கொடுக்கிறோம் என்று பொருள். இல்லையேல், நாம் தவறு செய்கிறவர்களாகவே இருப்போம். எல்லா காரியங்களிலும் தவறு செய்வது போல், கிறிஸ்தவ சமுதாயம் இக்காரியத்திலும் தவறு செய்து கொண்டுள்ளது. தேவனையும் அவருடைய குமாரனையும் அறிந்திருக்கிற நமக்கு, புறஜாதியான் என்று நம்பப்படுகின்ற அர்வனா கற்றுக்கொடுக்கும் இப்பாடத்தையும் நாம் தவறாமல் கற்றுக் கொள்வோம்.

**III. அர்வனா பெயரை நிலை நிறுத்திக் கொண்டான்.** (II. நாளா.3:1)

எபூசியாகிய அர்வனா பற்றி வேத வசனங்களில் சொல்லியிருப்பவை களிலிருந்து நாம் தெரிந்து கொள்கின்ற இன்னுமொரு பாடம், தமக்காகக் காரியமாற்றுபவர்களை தேவன் மறப்பதில்லையென்பது.

தேசத்து ஜனங்களின் நன்மைக்காகவும், கர்த்தரின் நாமத்திற்காகவும் அவன் செய்த தியாகத்திற்காக, அவன் உடனடியாக ஆசீர்வதிக்கப்பட்டான் என்று வேத வசனங்கள் நேரிடையாகச் சொல்லவில்லை. அதற்காக, அவனின் மிஞ்சின தியாகத்தை தேவன் கணக்கிலேயே எடுத்துக் கொள்ள வில்லையென்றும் நாம் சொல்லிவிட முடியாது. அவருடைய நாமத்தினி மித்தம் ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்று வசனம் சொல்கிறது (மத்.10:42). அவருடைய நாமத்தினிமித்தம் ஒரு கலசம் தண்ணீர் கூட கணக்கிலே வருமானால், அர்வனாவின் தியாகம் கணக்கிலே வராமல் இருந்திருக்குமா? இருந்திருக்காது. அப்படியானால், எப்படி வந்தது?

தாவீது சர்வ வல்லவருக்கு ஆலயம் கட்ட விரும்பியும், அதற்கு அனுமதி கிடைக்காமல், அவனுடைய மகன் சாலமோன் காலத்திலே தான் கட்டப்பட்டது. அவ்வாலயம் எங்கே கட்டப்பட்டதென்றால், " மோரியா " என்னும் மலையில் எபூசியனாகிய ஒர்னானின் களம் என்னும் தாவீது குறித்து வைத்த ஸ்தலத்திலே கட்டப்பட்டது. (II.நாளா.3:1) தேவனுடைய மகிமை விளங்கும்படியாகவும், தேவரீருடைய ஆசீர்வாதம் வெளிப்படும்படியாகவும், தேவனால் வடிவமைக்கப்பட்டதுமான இம்மகா ஆலயம் எழுப்பப்படுவதற்கு தேவன் இவன் இடத்தைத்தான் தெரிந்து கொண்டார் என்பது எவ்வளவு பெரிய பாக்கியம் பாருங்கள். ஒருவேளை தாவீது 50 சேக்கல் நிறை வெள்ளியைக் கொடுத்து களத்தையும், 600 சேக்கல் நிறை பொன்னைக் கொடுத்து நிலத்தையும் வாங்கியிருந்தாலும், அது, தாவீதின் நிலம் என்றோ, அல்லது அவனுக்கு வாரிசாக வந்த, சகல செல்வாக்கும் பெற்றுத் திகழ்ந்த சாலமோன் நிலம் என்றோ அல்லது அர்வனாவுக்கு முன்னால் அதற்கு உரிமையாள னாயிருந்த ஏதாவதொருவன் நிலம் என்றோ அழைக்கப்படாமல், அது அர்வனாவாகிய ஒர்னானின் களம் என்றே அழைக்கப்படுகிறது.

கை மாறினது தெரியாமல், பரிசுத்த ஆவியானவர் இதை மறதியாகச் சொல்லியிருக்க கண்டிப்பாக வாய்ப்பில்லை. ஆகவே அவனுடைய தியாகத்திற்கான பரிசாகவே நாம் இதை எடுத்துக் கொள்ளவேண்டும். உலகம் உள்ளவும்,எருசலேம் தேவாலயம் பேசப்படுமளவும் இவன் பெயரும் பேசப்படும். இதை நாம் சாதாரணமான ஒன்றாக எடுத்து விட முடியாது.

அருமையானவர்களே, நம்முடைய தேவன் எல்லாவற்றையும் கணக்கிலே வைக்கிற தேவனாயிருக்கிறாரென்பது எவ்வளவு மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் தரவேண்டும் தெரியுமா? ஒரு சமயம் பேதுரு, இயேசுவை நோக்கி, இதோ,நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றார் (மத். 19:22) அதற்கு இயேசு: மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். அத்தோடு, என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரனையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான் என்றார். (மத்.19:28,29)

நம்முடைய தேவன், அவருக்காக செய்கின்ற காரியங்களை கணக்கிலே எடுத்துக் கொள்ளுகிறபடியால் நாம் நற்கிரியைகளைச் செய்வதில் சோர்ந்து போகாமல் இருக்க வேண்டும். (ரோமர். 2:7) நாம், ஆவிக்குரிய ரீதியிலே அவருடைய பிள்ளைகளாக இருந்து, அவருக்காகச் செய்கின்ற கிரியைகளுக்கு பரலோகில் பலன் உண்டு. (பிலி.4:18,19) அர்வனாவிற்காகிலும், உலகம் உள்ளளவும் நிலைத்திருக்கும் பலன் மட்டுமே கிடைத்தது. நமக்கோ, நித்திய கால முழுவதும் நிலைக்கும் பலன் பரலோகத்தில் தேவனால் அந்நாளில் கொடுக்கப்படும். ஆகவே, பவுலடியார் சொல்வதுபோல, கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நாம் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர் களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்போமாக! (1.கொரி.15:58)

பிரியமானவர்களே, கொஞ்சமாகச் சொல்லப்பட்டிருக்கின்ற அர்வனாவைக் கொண்டு, நாம் கற்ற பாடங்கள் நமது ஆன்மீக வாழ்க்கைக்குப் பயனுள்ளதாய் இருக்குமென நம்புகிறேன். இனியாவது , எளியவர்களை அற்பமாய் எண்ணாமல், வேதாகமத்தைக் கவனமாகப் படித்து, அர்வனா போன்றவர்களாய் பாடம் கற்று, இம்மைக்குரிய ஆசீர்வாதங்களையும், மறுமைக்குரிய ஆசீர்வாதங்களையும் பெறுவோமாக! ஆமென்!!

செ. இராஜநாயகம்.

ஜெபியுங்கள்! திட்டமிடுங்கள்! பங்குபெறுங்கள்!

# காங்கேயம் கிறிஸ்துவின் சபையாரும்

## உலக வீடியோ வேதாகமக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

# *ஐந்தாம் வேதாகம கருத்தரங்கம்*

**(FIFTH ANNUAL BIBLE LECTURESHIP)**

நாள் : அக்டோபர் 14,15 - 2002
திங்கள், செவ்வாய் (அரசு விடுமுறை நாட்கள்)

நேரம் : தினமும் காலை 9.00 - 12.30 மணி வரை
மாலை 2.00 - 5.00 மணி வரை

இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

பேச்சாளர்கள் - தேர்ந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும்,
தங்குமிடமும் உட்பட

*பதிவுக் கட்டணம் ரூ. 25/ - மட்டுமே*

தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி
இடவசதி உண்டு.

*இவ்வருடம் மிகக் கூடுதல் வசதி செய்யப்பட்டுள்ளது.*

தொடர்பு முகவரி

கிறிஸ்துவின் சபை
288,தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.
போன் : 04257 - 30030,30382
செல் : 98427 - 30382

# கிறிஸ்துவின் சபை எவ்வளவு காலம் இந்தியாவில் இருக்கும்?

அடிக்கடி கேட்கப்படும் கேள்வி: '' கிறிஸ்துவின் சபை எவ்வளவு காலம் இந்தியாவில் இருக்கும்?'' என்பதே. இக்கேள்வி இந்திய மக்களால் மட்டுமே பதிலளிக்கப்பட வேண்டிய ஒன்று. இன்னொரு வார்த்தையில் சொல்லப்போனால், கர்த்தரை நேசித்து, அவருக்கு கீழ்ப்படிந்து அவருக்கு உண்மையுள்ளவர்களாய் வாழக்கூடிய அளவுக்கு இங்கு மக்கள் இருக்கும்வரை, சபை நிலைத்திருக்கும். அப்படிப்பட்டதொரு ஆர்வம் காட்டப்படாத பட்சத்தில் சபை தொடர்ந்து நீடித்திருக்க இயலாது. மேற்குறித்த கேள்விக்கு இதுவே எளிமையான பதில்.

வெளிநாட்டவர் யாரேனும் இருக்கிறார்களா இல்லையா என்பது முக்கியமல்ல. வெளிநாட்டு உதவிகள் வருகின்றனவா இல்லையா என்பதும் முக்கியமில்லை. சபைக்கென கட்டிடங்கள் இருக்கின்றனவா, இல்லையா என்பதும் அல்ல. முக்கியமானதெல்லாம், உள்நாட்டு மக்கள் கர்த்தர் விரும்புகிறபடி வாழ்கிறார்களா? இல்லையா என்பதுதான். இது இந்நாட்டிற்கும் பொருந்தும். வேறு எந்நாட்டிற்கும் பொருந்தும். கர்த்தருக்கு கீழ்ப்படிந்து அவரை சேவிக்கிற மக்கள் இருக்குமிடமெல்லாம் கர்த்தருடைய சபை இருக்குமிடமாகும். அப்படிப்பட்ட மக்கள் இல்லாத இடங்களில் சபையைக் காண இயலாது.

இன்றைக்கு இருந்து நாளைக்கு காணாமல் போகிற நிறுவனங்களில் தங்கள் வேலை போய்விடக்கூடாது என்பதற்காக, உள்நாட்டு மக்களில் சிலர் சபையில் அங்கத்தினராக மாற தயங்குகிறார்கள். ஆகிலும் நீங்கள் பயப்படாதீர்கள், நீங்கள் ஒரு முறை கர்த்தருடைய குடும்பத்தில் பிறந்துவிட்டால், (நீங்கள் பாவம் செய்யாதவரை) எப்பொழுதும் அதன் அங்கத்தினராக இருப்பீர்கள். உங்களிடத்தில் வந்து ஊழியத்தை ஆரம்பித்தவர் ஒருவேளை இடையில் சென்று விடலாம். ஆகிலும் அவர் தன்னோடு சபையையோ, உங்களில் உள்ள கிறிஸ்துவையோ, கிறிஸ்தவத்தையோ உங்களிடமிருந்து எடுத்துச் சென்றுவிட முடியாது. எனவே உங்கள் வட்டாரத்தில் உள்ள பிற அங்கத்தினருடன் சேர்ந்து சபை ஊழியத்தை எப்படி தொடர்ந்து கொண்டு செய்வது என்பது குறித்து நீங்கள் அறிவது அவசியமாகும்.

கிறிஸ்துவின் சபை புது டெல்லி பகுதியில் மட்டுமல்லாது, மும்பை, லக்னோ, ஷில்லாங், சென்னை மற்றும் இந்தியாவிலுள்ள அநேக பட்டணங்களிலும், கிராமங்களிலும் கிறிஸ்துவின் சபை நிலைத்துள்ளது எனும் செய்தி ஒருவேளை உங்களுக்கு சிறிது ஆறுதல் அளிக்கலாம். இந்தியாவின் எல்லா இடங்களிலும் இல்லை என்பதால், ஒரு காலக்கட்டத்தில்

சபை தொடர்ந்து இருக்காது என பொருள் கொள்ளக்கூடாது. மாறாக,சபை தேசத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் அதிவேகமாக பரவிக் கொண்டுள்ளது என்பது தெரிகிறது. இதுவே, சபை தொடர்ந்து நிலைத்திருக்கும் என்பதற்கு அறிகுறி. மேலும் இந்தியாவிற்கு கிறிஸ்துவின் சபை சமீபத்தில்தான் வந்தது என்பதால், இது ஒரு புதிதான சபையல்ல. கிறிஸ்துவின் சுவிசேஷமும், கர்த்தருடைய சபையும், உண்மையில் அப்போஸ்தலனாகிய தோமாவினால் இந்நாட்டில் முதன் முதலில் பிரசங்கிக்கப்பட்டுள்ளது என்பதையும் உலக வரலாற்றிலேயே கூறப்படுகிறது.அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயர் 1:23-ல் எழுதியுள்ளபடி சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற அனைத்து சிருஷ்டிக ளுக்கும் பிரசங்கிக்கப்பட்டாயிற்று என்று கூறுவதன் மூலம் அது இந்தியாவையும் சேர்த்தே குறிப்பிடப்பட்டுள்ளது என அறிய முடியும். உதாரணமாக அன்றைக்கு சுவிசேஷத்தைக் கேட்டவர்கள், கீழ்ப்படிந்தபோது, என்னவாக மாறினர். அப்போஸ்தலர் 2:47-ன்படி அவர்களை அது கர்த்தருடைய சபை அங்கத்தினராக மாற்றியது. பிறகு அதற்கு என்ன நேர்ந்தது? உலகின் அநேக பகுதிகளில் நிகழ்ந்தது போலவே இங்கு இந்தியாவிலும் நிகழ்ந்தது. காலத்தினூடே ஜனங்கள் தவறானவைகளில் விழுந்து சபையின் அடையாள அறிகுறிகள் காணாமல் போய், அல்லது ஆரம்ப அடிச்சுவடு இல்லாமல் போய்விட்டது. அதன் பொருள் கர்த்தருடைய சபை இந்தியாவில்மீட்டு அமைக்கப்படும் பணி கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாகவே துவக்கம் பெற்றது.

அடுத்து, கிறிஸ்துவின் சபை என்பது அமெரிக்கா சபை அல்ல என்பதை மனதில் வைக்க வேண்டும். இதன் துவக்கம் அமெரிக்காவில் இடம் பெறவில்லை. மாறாக இது ஆசியாவிலுள்ள எருசலேம் பட்டணத்தில், அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தின் படி ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் துவங்கியது. இது நாமகரணக் கூட்ட சபையும் அல்ல. அது மனிதனிடத்தில் துவக்கம் பெறவில்லை, மாறாக கிறிஸ்துவினிடத்தில் துவக்கம் பெற்றது. (மத்.16:18) வேதாகமம் சபையின் முழுமையான மாதிரியைக் காட்டுகிறது. ஆகையால், அதன் மாதிரி பின்பற்றப்படும்போது, கர்த்தருடைய சபைதான் ஸ்தாபிதம் பெற வேண்டும். அது இங்கேயும் உலகின் எப்பகுதியிலேயும் உண்மையானது. இதன் மாதிரியைக் கவனியுங்கள்.

1. சபையை ஸ்தாபித்தது யார் என்பதை இது காட்டுகிறது. மத்.16:18
2. அது எங்கு ஸ்தாபிக்கப்பட்டது என்பதை இது காட்டுகிறது. அப்.2
3. அது எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது என்பது காட்டுகிறது. அப்.2
4. அது தரித்துக் கொண்ட பெயர் என்ன என்பதைக் கூறுகிறது. ரோமர்.16:16

5. அதன் அங்கத்தினர் என்ன பெயரைத் தரித்துக்கொண்டனர் என்பதைக் கூறுகிறது. அப்.11:26

6. சபையில் ஜனங்கள் எப்படி அங்கத்தினர்களாயினர் என்பதை இது காட்டுகிறது. மாற்கு 16:15,16; அப்.2:38,37.

7. இதின் ஆராதனையைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது (அப்.20: 7)

8. சபைக்கு தலைவர் யார் என்பதைக் கூறுகிறது. கொலெ.1:18

9. எத்தனை சபைகள் ஆதியில் இருந்தன என்பதை அது கூறுகிறது. எபே.4:4; 1:22,23

இப்படி வேதாகமம் இன்னும் அநேக காரியங்களை கூறுகிறது. ஆனால் ஜனங்கள் இந்த மாதிரியைப் பின்பற்றும்போது, கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களாகின்றனர். உலகில் நீங்கள் எங்கு சென்றாலும், இந்த மாதிரியைப் பின்பற்றுபவர்கள் உங்களைப் போலவே இருப்பதையும், நீங்கள் அவர்களைப் போலவே இருப்பதையும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருப்பதையும்,கிறிஸ்துவின் ஒரே சரீரமாயிருப்பதையும் அதுவே கிறிஸ்துவின் சபையாக இருப்பதையும் காண்பீர்கள்.

இங்கே குறிப்பிட்ட வசனங்களில் வெளிச்சத்தில் உங்கள் வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறோம். இது சத்தியமாக உங்களுக்கு தோன்றினால், பிறகு ஏற்றுக்கொள்ளுங்கள். இது சத்தியத்திற்கு அப்பாற்பட்டதாகக் காணுமாயின்,ஒதுக்கி தள்ளுங்கள். ஆனால் நேர்மையாக உண்மையாக படிப்பீர்களேயானால், இந்த காரியங்களில் உள்ள உண்மைகளை நிச்சயமாக நீங்கள் காண முடியும். யாரும் உங்களை வஞ்சிக்க முற்படவில்லை. உங்களுக்கு உதவி செய்யவே நாங்கள் விரும்புகிறோம். அதற்கு சரியான வழி தேவனுடைய வசனத்தை நாங்கள் உங்களுக்கு சுட்டிக் காட்டுவது தான்.

எனவே நீங்கள் கர்த்தருடைய சபையில் வாஞ்சையாயிருந்தால், அது இந்தியாவில் நிலைத்திருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், பிறகு கர்த்தருக்குக் கீழ்ப்படியுங்கள். அவரிடத்தில் விசுவாசமாய்த் தரித்திருங்கள், பிறரையும் அப்படிச் செய்ய ஊக்கப்படுத்துங்கள். உங்கள் மூலமாயும், உங்களை போன்றே பிறர் மூலமாயும், கிறிஸ்துவின் சபை இங்கு தொடர்ந்து நிலைபெறும்.

**J.C.Choate** J.C. சோட்

# நாவு

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, தேவன் மேல்நாம் வைத்திருக்கும் விசுவாசத்திற்கு பொறுப்புள்ளவர்களாய் நடந்து கொள்ள வேண்டும். நம்முடைய நம்பிக்கை, நடத்தை ஆகிய இவற்றுக்கு நாம் ஒரு நாளைக்கு கணக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம்.

1.யோவான் 4:8 ல் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று வாசிக்கிறோம். எனவே நாமும் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருக்க வேண்டும். இந்த அன்பானது தேவனிடத்திலிருந்து வருகிறது. தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி அவரை இரத்தஞ் சிந்த வைத்து, இவ்விதமாய் நம்மில் அன்பு கூர்ந்தார். இயேசு கிறிஸ்து நம்முடைய பாவத்திற்காக தன் ஆருயிரை விலையாகக் கொடுத்தார். அருமையான சகோதரிகளே, தேவன் இவ்விதமாய் நம்மில் அன்பு கூர்ந்திருக்க நாம் பிறரிடத்தில் அன்பு காட்டுவது எவ்வளவு அவசியம்.

எவ்விதமாய் அன்பை நாம் பெற்றிருக்க வேண்டும்? அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் காட்டும் அன்பாகும். (1.யோவான் 5:3)

1. கொரி 13 ம் அதிகாரத்தில் அன்பின் தன்மைகளை பற்றிப் படிக்கிறோம் (4-7) வசனப் பகுதிகளில் ''அன்பு'' என் ற வார்த்தைக்கு பதில் ''நான்'' என்ற வார்த்தையை போட்டு வாசித்துப் பாருங்கள்.

நாம் பிறரிடம் காட்டும் பல வகையான அன்புகளில், '' நாவின்'' மூலம் நாம் காட்டும் அன்பு பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

''மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்'' (நீதி.18:21) இந்த நாவு என்பது மிகவும் சக்தி வாய்ந்த ஒன்று. இது மற்றவர்களின் ஆவியை முறிக்கக்கூடியதாயிருக்கிறது. மேலும் இது ஒருவனுடைய ஆவியை உயிர்ப்பிக்கச் செய்து அவர்களை தேவனிடத்தில் கொண்டு வரச் செய்யவும் உதவுகிறது. மத்.12:36,37. ஆகிய வசனங்களில், நாம் பேசின வீணான வார்த்தைக்கு நாம் கணக்கு கொடுக்க வேண்டும் என்று பார்க்கிறோம். நாம் நீதிமான்களா, குற்றவாளிகளா என்று நாம் பேசும் வார்த்தைகளை வைத்து நியாயந்தீர்க்கப்படுவோம்.

யாக்கோபு 1:26-ல் ஒருவன் தன் நாவை அடக்காமல் தன்னை தேவ பக்தியுள்ளவனென்று எண்ணக்கூடாது. நம் சரீரத்தில் உள்ள உறுப்புகளில் அடங்காத தன்மை வாய்ந்தது. நம்முடைய நாவு (யாக்.3:5-10). ஆகிய

வசனங்களிலும் நாவைப் பற்றி ஆவியானவர் குறிப்பிடுகிறார். சரீரத்தில் நாவு என்பது மிகச் சிறிய அவயவமாயிருந்தாலும் பெரிய தீமைகளைச் செய்து விடுகிறது. குடும்பங்கள்,நட்பு, அரசாங்கங்கள்,நாடு, சபை ஆகியவைகள் இந்த நாவால் அழிந்து கொண்டிருக்கின்றன. பல மிருகங்களை அடக்கி ஆளும் ஒரு மனிதன் தன் சொந்த நாவை அடக்க முடியாமல் இருக்கிறான். ஒரே நாவினால் நன்மையையும், பேசுகிறான், அதே நாவினால் தன்னை படைத்த தேவனை நிந்திக்கவும் செய்கிறான். இப்படிப்பட்ட காரியங்களை தேவனுடைய பார்வையில் நலமானதாக இராது.

வேதாகமத்தின் துணை கொண்டு நம் நாவினால் நாம் செய்யவும் நன்மையான காரியங்கள் தீமையான காரியங்கள் இவைகளை கண்டு கொள்ளலாம். அருமையான சகோதரிகளே! இம்மாதம் நாவைக் கொண்டு நேரிடும் தீய செயல்கள் பற்றி ப் பார்க்கலாம்.

சங்கீதம் 5:9 தீய காரியங்களைப் பேசுகிற நாவினால் உண்மையான வார்த்தைகளாகிய வேத வார்த்தைகளைப் பேச முடியாது. ஏனென்றால் அவர்கள் இருதயம் தீமையினால் நிறைந்திருக்கிறது.

சங்கீதம்.10:7 ''அவன் வாய் சபிப்பினாலும், கபடத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது. அவன் நாவின் கீழ் தீவினையும் அக்கிரமமும் உண்டு''

சங்கீதம்.12:1-4 பக்தியில்லாதவன் தன்னை தீமைக்கு ஒப்புக் கொடுக்கிறான். ஏனென்றால் தான் என்ன பேசுகிறேன் என்பதை பற்றி சற்றும் கவலையற்றவனாயிருக்கிறான். இச்சகம் பேசுகிற உதடுகளையும், பெருமை களைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அறுத்துப் போடுவார். அதேப் போல் சங்.52:1-5 வசனங்களில் கபடமுள்ள நாவு எவ்வளவு தீமைகளையும், அழிவையும் கொண்டு வருகிறதென்று வாசிக்கலாம். சிலருடைய நாவுகள் கருக்கான பட்டயம் போல் இருக்கிறது. அவர்கள் மற்றவர்களின் இருதயத்தை அழிக்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள். (சங்.57:4)

சங்கீதம் 64:2-8 வசனங்களில் நாவினால் ஏற்படும் தீமைகளை பட்டியலிட்டு காண்பித்திருக்கிறார் (நீதி.6:16-19) ஆகிய வசனப் பகுதிகளை முடிந்தால் மனப்பாடம் செய்து, இவைகளை விட்டு விலகி இருக்க பழகிக் கொள்ள வேண்டும். கர்த்தர் வெறுக்கும் ஆறு காரியங்களைப் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. பொய் நாவு, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், அபத்தம் பேசும் பொய்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் ஆகிய காரியங்களை நாவினால் ஏற்படக் கூடிய தீமைகளாகும்.

புதிய ஏற்பாட்டிற்கு வருவோமென்றால் அங்கும் நாவினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி பார்க்கலாம். கலாத்தியர் 5:15-ல் நமக்கு ஒரு எச்சரிப்பு

கொடுக்கப்பட்டிருக்கிறது. ''நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர் தீர்களானால் அழிவீர்கள். அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். மேலும் கலா.5:19-21 வசனங்களில் மாம்சத்தின் கிரியைகளைப் பற்றிப் பேசப் படுகிறது. இந்தப் பட்டியலில் பெரும்பாலானவை இருதயம், நாவு சம்பந்தப்பட்டவைகளில் ஏற்படக்கூடிய தீமைகளாக இருக்கிறது. இவைகளை ஒரு கண்ணாடியைப் போல் முன் வைத்து நாம் எந்த வகையைச் சார்ந்தவர்கள் என்று பார்க்க வேண்டும்.

யாக்கோபு 3:13-18-ல் வசனங்களில் ஞானியும், விவேகியுமாயிருக் கிறவன் சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்க வேண்டும்.

14-ம் வசனத்தில் ஒரு எச்சரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. பகையும், சுய நலமும், நம் உள்ளத்திற்குள் இருக்கிறதா என்று நம்மை நாமே சோதித்துப் பார்க்கவேண்டும். ஒருவேளை, அவைகள் நமக்குள் இருக்குமானால் நம்மையும், பிறரையும் ஏமாற்றாமல் அவைகளை ஒத்துக் கொள்ளவேண்டும். (17-18) வசனங்களில் பரத்திலிருந்து வருகிற ஞானத்தைப் பற்றி பார்க்கிறோம். அவைகள் முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், பட்ச பாதமில்லாததாயும், மாயமற்றதாயுமாயிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! மேலே வாசித்த இக்கட்டுரையில் நாவின் தீமைகளைப் பற்றி பழைய,புதிய ஏற்பாடுகளில் இருந்து பல வசனப் பகுதிகளில் பார்த்தோம். நாம் இதுவரை நாவை இப்பேர்ப்பட்ட தீய காரியங்களுக்கு பயன்படுத்தியிருப்போமானால், நம்மை நாமே சோதித்துப் பார்ப்போம். கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த இதழில் நாவினால் விளையும் நன்மைகள் பற்றி வசனத்தின் துணை கொண்டு ஆராய்வோம்!

ரேச்சல் நாயகம் **MARY DI PALMA**

### வேதாகமம் சாத்தானுக்கு கொடுக்கும் பெயர்கள்

1. சாத்தான் (யோபு.2:1) 2. பொய்க்கு பிதா (I.யோவா.3:8)

3. கொலை பாதகன் (வெளி.20:2) 4. பெயல் செபூல் (மத்.12:24)

5. பேலியாள் (II.கொரி.6:15) 6. உலகத்தின் அதிபதி (யோ.12:31)

7. ஆகாயத்து அதிகார பிரபு. (எபி.2:2) 8. வலு சர்ப்பம். (வெளி.12:7)

9. பிரபஞ்சத்தின் தேவன் (II.கொரி.4:4) 10. சோதனைக்காரன் (மத்.4:3)

# டாக்டர் லூக்கா

சிறு பிள்ளைகளாகிய நமக்கு டாக்டர் ஆகனும், இன்ஜினியர் ஆகனும்னு ரொம்ப ஆசை. அப்படித் தானே. புதிய ஏற்பாட்டிலே, பரலோகத்தின் தேவன் ஒரு டாக்டர் பற்றி நமக்குச் சொல்லியிருக்காரு. அந்த டாக்டர் எப்படிப்பட்ட டாக்டர் என்று இம்மாதம் பார்த்து விடலாமா?

கிறிஸ்தவர்களையெல்லாம், ஒரு காலத்திலே ரொம்பக் கொடுமைப் படுத்தி, பிறகு, நமது இயேசு ஆண்டவரால் சந்திக்கப்பட்டு, பாவங்கள் போக ஞானஸ்நானம் பெற்ற பவுல்(அப்.22:16 )இயேசுவுக்காக சிறப்பான ஊழியம் செய்தார். வைராக்கியமாக ஊழியம் செய்தபடியால், சிறையில் அடைக்கப்பட்டார். கிறிஸ்துவுக்காக ஒப்புக்கொடுத்து வாழ்பவர்கள், எந்த இடத்தில் இருந்தாலும் சும்மா இருக்க மாட்டார்கள். அதுபோல, பவுலும் சும்மா இராமல், பல இடங்களில் இருந்த சபைகளுக்கு கடிதங்கள் எழுதினார். அப்படி எழுதின ஒரு கடிதத்தில் தான் லூக்காவை, டாக்டர் லூக்காஎன்று கூறுகிறார். (கொலோ.4:14)இவர் அப்போஸ்தலன் பவுலுக்கு நல்ல நண்பனாகவும் ஊழியத்தில் உதவி செய்பவராகவும் இருந்துள்ளார்.



இந்த டாக்டர் லூக்கா, மூன்றாவது நற்செய்தி நூலையும், அப்போஸ்தலர் நடபடிகள் நூலையும் எழுதியுள்ளார். புதிய ஏற்பாட்டை எழுதினவர்களில், கிரேக்கப் பெயரை உடையவர் நம்முடைய டாக்டர் தான் இவருக்கு இது இன்னுமொரு டாக்டர் பட்டம் போன்று.

அந்த கால கட்டத்தில் கிரேக்கர்கள் மனித உடல் பற்றியும், மருந்துகள் பற்றியும் அதிகம் அறிந்து வைத்திருந்தனர். ஆகவே, நம்முடைய டாக்டர் ஒரு கெட்டிக்கார டாக்டராகவே இருந்திருப்பார். இவர் ஒரு டாக்டர் என்பதற்கு, பவுல் சொன்னதோடு, வேறு ஆதாரங்களும் வேதாகமத்தில் உண்டு.

இவர் மற்ற சுவிசேஷ எழுத்தாளர்களைப் போலல்லாமல், இயேசு ஐயரின் 19 அற்புதங்களைத் தன்னுடைய நூலில் எழுதியுள்ளார். இவைகளில் பெரும்பாலானவை, நோயுள்ளவர்களையும், மரித்தோரை எழுப்புதல் பற்றியுமே பேசுகிறது. இவர் டாக்டராக இருக்கிறதினால் தானே இப்படி எழுதியுள்ளார்.

இந்தடாக்டர் லூக்காவிடமிருந்து நாம் என்னத்தை இம்மாதம் கற்றுக் கொள்கிறோம்? நாம் படித்து பின்னாளில் டாக்டர் ஆனாலும், இன்ஜினியர் ஆனாலும், கலெக்டர் ஆனாலும், அந்த வேலையோடு சேர்த்து நாம் ஊழியம் செய்கிற பிள்ளைகளாகவும் இருக்க வேண்டும். டாக்டர் லூக்கா அப்படித் தானே இருந்துள்ளார். நாமும் அப்படி இருப்போமா?

சிறு பிள்ளைகளாகிய நம்மை பரலோகத்தின்தேவன் ஆசீர்வதிப்பாராக!

**R. Abel Rodger Nagayam**

# ஞானோதயத்தைக் காட்டிய நட்சத்திரம்

காணாத இடம் தேடி மாந்தர்கள் பிரயாணிக்கையில் வழிகாட்டி அமைய வேண்டுமென்று எண்ணுவர், கடலில் பயணம் மேற்கொள்ளும் கப்பல், காந்த வழிகாட்டியை தன்னுடன் வைத்திருக்கும், கரும்பாறை தன்னை கப்பல் கவனியாமலிருக்கக்கூடாது என்பதற்காக பாறைகளில் விளக்குகள் வைக்கப்பட்டிருக்கும், காரிருளில் பயணிக்கும் கப்பல் கரை சேர உதவும் படிக்கு கலங்கரை விளக்கம் கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கும், நிலவோடு நம்மைவிட நெருக்கமாக உறவாடி இரவில், வானில் பறக்கும் வானவூர்தி கடும் மலையில் மோதி நொருங்கிவிடக் கூடாது என்பதற்காக சிகரத்தில் சிவப்பு விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும். பயணிக்கும் ஒருவன் பாதை தவறிவிட்டால், எரிந்த விளக்கு, அடித்த காற்றால் அணைவதால் இருள் கவ்விக்கொள்வது போல்; அவனை பயமும் திகிலும் சூழ்ந்து கொள்ளும், அந்நேரம் அவனுக்கு அவ்வழி அறிந்த ஒருவன் துணையாக கிடைத்து விட்டால், வையகத்திற்கு வெளிச்சம் தரும். பரிதியை தான் பெற்றுக்கொண்டேன் என்ற பேரின்ப உணர்வு பொங்கிவரும், பயமும் திகிலும் மங்கி விடும்.

பாவமாகிய எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டு, செங்கடலால் சேதம் உண்டாகாமல், ஒரு குதிரை வனாந்தரவெளியிலே நடக்கிறதுபோல, தேவன் இஸ்ரவேலர்களை ஆழங்களில் நடக்கப் பண்ணினார், ஆழிகள் ஊடே அழியாமல் காத்த தேவன் , இஸ்ரவேல் ஜனங்களை பள்ளத்தாக்கிலே,இறங்கி இளைப்பாறுகிற மிருக ஜீவன்களைப் போல ஓய்வெடுக்கவும் செய்தார். சூரியக் கதிர்கள் தாக்கி சுருண்டுவிடக்கூடாது என்று, முகில் கூட்டத்தை படப்பாய் விரித்து மறைவை உண்டாக்கினார். இரவின் இருளாலே இடறிவிழக் கூடாதென்று, அக்கினி தன்னை அவர்களுக்கு வெளிச்சமாய் தந்தார். சொந்த ஜனமான இஸ்ரவேல் காணாத கானானுக்கு பாதுகாப்பாய் சேரவேண்டுமென்று அவரை வழி காட்டினார். (ஏசாயா 63:13,14; சங்:105:39) தேவ ஜனமான நாமும் விசுவாச கண்ணால் கண்ட இயேசுவை மற்றவர்கள் காண வழிநடத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், ஞானிகளுக்கும் வழிகாட்டிய தாரகை தன்னை உங்கள் முன் வைக்கிறேன், அதைக் கண்டு பின்சென்றிடுக.

### *சாஸ்திரிகளுக்கு ஆனந்த சந்தோஷம் தந்தது*

விண் தீபம் போல ஜொலித்த விண்விளக்கு கண்டு கீழ்திசை ஞானிகள், யூதரின் ராஜா உதித்தார் என்று யூகித்து கொண்டு யூதாவின் நாட்டை தேடி, அரசனைப் பணிந்து கொள்ள எருசலேமுக்கு வந்தனர். பிறந்தவர் ராஜா என்பதால், தலைநகர் சென்று அவரை அரண்மனையில் காண்போம் என்று தங்களுக்குள்நினைத்து, ஏரோது ராஜா என்பதால், தலை

நகர் சென்று அவரைஅரண்மனையில் காண்போம் என்று தங்களுக்குள் நினைத்து, ஏரோது ராஜாவிடம் சென்று ஏக்கத்துடன் விசாரித்தனர். ராஜா அங்கே பிறந்தார் என்ற நினைப்பு பொய்த்துப் போனது கண்டு சாஸ்திரிகள் மனமொடிந்து போயினர். ஏரோது அவர்களை இரகசியமாய் அழைத்து, நட்சத்திரம் காணப்பட்ட காலம் குறித்து திட்டமாய் விசாரித்து, நீங்கள் தேடி கண்டு பிடியுங்கள் நானும் வந்து பணிந்து கொள்ள அது உதவியாக இருக்கும் என்ற பசப்பு வார்த்தைகளைக் கூறி அனுப்பி வைத்தான்.

ராஜா சொன்னதைக் கேட்டு, குழந்தையிருக்குமிடம் அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஏக்கம் கொண்டு, அதற்கு வழிதேடி, சாஸ்திரிகள் அரண்மனைக்கு வெளிவந்தனர். இந்த சமயத்தில் தான், ''இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது, அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்'' (மத்.2: 9-10). வெகு தூரப் பிரயாணம் வீணாக போய்விடுமோ என்ற அச்சம், அரசனை பணிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை நிராசையாகிவிடுமோ என்ற வருத்தம். பட்டபாடும் பிரயாசமும் விருதாவாக போய்விடுமோ என்ற ஏக்கம். எதிர்பார்ப்புகள் ஈடேறவில்லை என்பதால் எதிர்பாரத சோகம் இவைகளை இருதயத்தில் தேக்கிக் கொண்டு வெளிவந்த வேளையில் நட்சத்திரம் தோன்றி சாஸ்திரிகளின் துக்கத்தை ஆனந்த சந்தோஷமாக மாற்றியது.

வாலிபர்களே! இந்த நட்சத்திரம் போலவே நாமும் சந்திக்கிறவர்களுககு சந்தோஷத்தைத் தருகிறவர்களாக இருக்க வேண்டும். மார்க்கம் தப்பி செல்லும் இளம் வாலிபர்கள் அநேகரை நாம் கண்டு சரியான வழியை காட்டி சந்தோஷத்தைத் மீட்டுத் தர வேண்டும். ஒருமுறை நமது ஆண்டவரைக் காண ஆவலாக வந்தான் ஆயக்காரர்களின் தலைவனாகிய சகேயு. கருணை நிறை கர்த்தர் இயேசு கனிவாக அண்ணாந்து பார்த்து, வீட்டிலே தங்க வேண்டும் என்றவுடன் எல்லையில்லா சந்தோஷத்தால் நிறைந்தவனாக இயேசுவை ஏற்றுக்கொண்டான் (லூக்கா. 19: 6)என் இனிய வாலிப மக்களே, நாமும் யூதாவில் உதித்த நட்சத்திரமாகிய இயேசுவைப் போல, அந்த நட்சத்திரம் பிறந்த இடம் காட்டி சாஸ்திரிகளை சந்தோஷப்படுத்திய விண்மீனைப்போல பிறரை நாம் காணும்போது, இரட்சிப்பின் சந்தோஷத்தை அள்ளித்தருகிற வர்களாக இருந்திடல் வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல், தீமோத்தேயுவுக்கு எழுதும் இரண்டாம் நிருபத்தில்,''...சந்தோஷத்தால் நிறையப்படும் படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருந்து'' (2.தீமோ.1:4)என்றெழுதுகிறார். வாலிபர்களே, மெத்தப் படித்த பவுல், வாலிபனாகிய தீமோத்தேயுவுக்கு தான் இரண்டாம் முறை சிறை யிருக்கும்போது எழுதுகையில், இப்படி தன் வாஞ்சையை வெளிப்படுத்தி எழுதுகிறார். மாபெரும் கிறிஸ்தவனாக விளங்கிய பவுல், '' நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதையாயிரு'' (2.தீமோ.4:9,21)என்று தனது எண்ணங்களை வெளிப்படுத்தும்போது, தனக்கு சந்தோஷமாயிருந்த

தீமோத்தேயு தான் பானபலியாக வார்க்கப்பட்டு போகும் முன்னே சந்தோஷத்தை நிறையதர வேண்டும் என்ற ஆசையை வெளிக்காட்டுகிறார். அந்த மாமனிதனுக்கு சந்தோஷமாய் திகழ்ந்த தீமோத்தேயு இந்த நட்சத்திரம் போல இருந்தான் என்பதில் சந்தேகமில்லை. வாலிபர்களே, நீங்களும் நானும் பிறருக்கு சந்தோஷத்தை அள்ளித் தருகிறவர்களாக இருப்போம்.

## நட்சத்திரம் இருக்கும் இடத்திற்கு வழிகாட்டிய நட்சத்திரம்

சாஸ்திரிகளுக்கு ஆனந்த சந்தோஷத்தை அள்ளித்தந்த நட்சத்திரம், அவர்களை இயேசுவாகிய யூதாவின் நட்சத்திரம் இருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றது, "... நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது" (மத்.2:9) என்ற செய்தியை அப்போஸ்தலனாகிய மத்தேயு யாத்துக் கொடுத்திருக்கிறார். விண்வெளியில் விண்ணகத்தந்தையின் வல்லமையாய் விதைக்கப்பட்ட விண்மீன்கள் எண்ணிக்கையில் அடங்காமலிருந்திருக்கும். அத்தனை விண்மீன்கள் மத்தியிலும், சாஸ்திரிகளை வழிநடத்திய நட்சத்திரம் வித்தியாசமாக திகழ்ந்ததால் தான், அதனால் கவரப்பட்ட சாஸ்திரிகள், இயேசு இருக்கும் இடத்தை சரியாக அடைய முடிந்தது.

வாலிபர்களே! இந்த விசேஷ நட்சத்திரம் வித்தியாசமாக இருந்து சாஸ்திரிகளை, இயேசுவிடம் சேர்த்தது போல நாமும், இவ்வுலகில் வாழும் மாந்தர்களிடமிருந்து வித்தியாசமானவர்களாய் நடந்து, நம்முடைய பரிசுத்த வாழ்க்கையினால் பலரை இயேசுவிடம் அழைத்துவரும் நட்சத்திரங்களாக இருக்க வேண்டும். சாஸ்திரிகள் கிழக்கே இருந்தநட்சத்திரத்தைக் கண்டு தவறான இடம் தேடி அரண்மனைக்குப் போனார்கள். அதுபோலவே தூரத்தில் இருந்து நமது நடக்கையை கவனிக்கும் மனிதர்கள், கிறிஸ்துவைத் தேடி அவர் இல்லாத இடம் செல்ல வாய்ப்புண்டு, அப்படி அவர்கள் சென்றாலும், இந்த நட்சத்திரம் போலவே நாமும் அவர்கள் இயேசு இருக்குமிடம் வந்து சேரும் வரை விடாமல் முன்னோடிகளாகவே இருக்க வேண்டும்.

சாஸ்திரிகளை வழிநடத்திய தாரகை, இயேசு இருக்கும் இடம்வரை அவர்களை வழிநடத்தாமல் இருக்குமானால், எருசலேமிருந்து 6மைல் தொலைவிலிருந்த பெத்லகேமையும், முக்கியமாக இயேசுவை காணாமலே சோகத்துடன் நாடு திரும்பியிருப்பார்கள். அதுபோலவே நாமும், கடைசி வரை நம்மை பார்க்கிறவர்களை வழிநடத்திவில்லை என்றால், இயேசுவின் அருகாமை வரை வந்தவர்கள் ஏமாற்றத்துடன் தங்கள் வாழ்க்கை பயணத்தைமுடித்து விடும் நிலைமை ஏற்படும். ஆகவே எனக்கன்பான வாலிபர்களே! சாஸ்திரிகள் கண்ட நட்சத்திரம் போலவே நாமும் பிறருக்கு வித்தியாசமான, மற்றும் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்வோம். அநேகரை கிறிஸ்துவிடம் வழிநடத்தும் கலங்கரை விளக்கமாக திகழ்வோம்.

பெத்லகேம் நகர் வரையில் நின்ற நட்சத்திரம், சாஸ்திரிகளை இயேசுவிடம் வழிநடத்தியதின் மூலம், அவர்களது பிரயாணத்தின் நோக்கத்தையே நிறைவேற்றி முடித்தது இவ்வுலக வாழ்க்கைப்

பயணத்திற்கும் ஒரு உன்னத நோக்கமுமுண்டு. மனிதனாகிய சிருஷ்டி தேவனை மகிமைப்படுத்த வேண்டுமென்பதே அந்த நோக்கம் (ரோமர். 1:2;9:23). வாலிபர்களாகிய நாமும் நீதியின் சூரியனாகிய இயேசுவின் உதயத்தைக் காட்டிய இந்த நட்சத்திரத்தைப்போலவே பிறருடைய வாழ்க்கை பிரயாணத்தின் நோக்கத்தை நிறைவேற்றி தேவனை மகிமைப்படுத்த உதவியாக இருப்போம். அப்படி நாம் அநேகரை நீதிக்குட்படுத்தும் நட்சத்திரங்களாக திகழ்வோம், என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்போம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாரக! ஆமென்.

**J.Pickens** ஜே. பிக்கின்ஸ்.

---

## *விசுவாசத்தின் அடிப்படைகள் -3*

சென்ற இதழ் தொடர்ச்சி...

உ) அழிக்க முடியாமை

1. மத்தேயு 24:35
2. வேதாகமத்தை அழிக்க முயற்சிகள்:

அ) எரேமியா 36 - யோயோக்கீம் ராஜா வேதத்தைக் கிறித்து தீயிட்டான். அதனால் தேவன் எரேமியாவைக் கொண்டு பழைய சுருள்களை மறுபடியும் எழுதினார்.

ஆ) கத்தோலிக்க சபை தொடர்ந்து வேதத்தில் செல்வாக்கை அழிக்க முயற்சித்தது. உதராணமாக, அதன் கார்டினல்கள் 1550-ல் போப்புக்கு எழுதிய வாசகத்தைப் பாருங்கள். ஆயினும் இன்னும் வேதாகமம் நிலைத்திருக்கிறது.

இ) வால்ட்டேர் (1694 - 1778) இந்த பிரெஞ்சு தத்துவமேதை இன்னும் 100 வருடங்களில் ஒரு பைபிள் கூட இருக்காது என்றார். ஆனால் அவருடைய மரணத்துக்குப் பின் அவருடைய அச்சகங்கள் வேதத்தை அச்சிடவும் அவருடைய வீடு அவைகளை சேமித்து வைக்கவும் பயன்படுகிறது. நிச்சயமாகவே வேதாகமம் தேவனிடமிருந்து வந்தது. அது இன்றும் நிலைத்திருக்கிறது.

ஏ) மேலான ஒழுக்க நெறிகள்:

1. இயேசு சொன்னார் - மத்தேயு 5:44
2. இயேசு சொன்னர் - மத்தேயு 16:24
3. பவுல் சொன்னது - கொலோ 3:1,2
4. யாக்கோபு சொன்னது - யாக்கோபு 1:2
5. இவைகள் மனிதர்களுடைய புத்திமதிகள் போலவா

கேட்கிறது.ஆவிக்குரிய காரியங்களில் தேவ வார்த்தையாகிய வேதத்ததை தவிர ஒரு நிலையானஅதிகாரமாக ஏற்றுக் கொள்ள வேறு ஏதாவது இருக்கிறதா?

மனிதனுடைய பாரம்பரியங்களும் பழக்க வழக்கங்களும்:

1. இன்றைக்கு இருக்கிற பிரிவினைக் கூட்டத்தில் குழந்தைகள் ஞானஸ்நானம், மாதத்தில் ஒருநாள் கர்த்தருடைய பந்தி. ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துவது, இவைகள் எல்லாமே மனிதர்களுடைய பாரம் பரியங்களே.

2. அதை முதல் நூற்றாண்டு சபையோடு ஒப்பிட்டுப்பாருங்கள். அப்.17:11

3. மனிதர்களுடைய பாரம்பரியங்கள்.

4. இயேசுவின் எண்ணம் என்ன? மாற்கு 7:7-9

5. மனிதர்களுடைய பாரம்பரியங்களையும், பழங்கால வழக்கங்களையும் குறித்து அப்போஸ்தலனாகிய பவுலின் எண்ணம் என்ன?

கொலோ 2.8

இந்தத் தகவல் History and Mystery of Religion என்ற புத்தகத்திலிருந்து. ஏஜஸ் - ஆசிரியர்.

ஜே. போர்ட்டர் வில்ஹட் - ஸ்டார் பப்ளிகேஷன்ஸ்

மகா பரிசுத்தமுள்ள உமக்கு எங்களால் கொடுக்க முடிந்த எல்லா ஆலோசனைகளிலும் மிக முக்கியமானதை கடைசிவரை இரகசியமாகவே வைத்திருக்கிறோம். நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியதில் நாம் நமது கண்களை நன்றாகத் திறந்தும், நாம் சிந்திக்கப் போகிற வேலையில் எல்லா வல்லமை யோடும் தலையிட வேண்டும். சுவிசேஷம் வாசிக்கப்படுவது எவ்வளவு குறைவாக அனுமதிக்கப்பட முடியுமோ அவ்வளவு குறைவாக அனுமதிக்கப்பட வேண்டும். (விசேஷமாக நவீனமான பாஷையிகளிலும் உம்முடைய அதிகாரத்தின் கீழுள்ள நாடுகளிலும்) பொதுவாக ஆராதனையில் வாசிக்கப் படுகிற மிகக் குறைந்ததே போதுமானது, வேறு எங்கும் சுவிசேஷம் எவரும் வாசிக்க தடை விதிக்க வேண்டும். (மக்கள் எதுவரை அந்த குறைந்த அளவோடு திருப்தி அடைகிறார்களோ அதுவரை நம்முடைய நலன் பெருகும். ஆனால் மக்கள் எந்த சமயத்திலிருந்து, அதிகம் வாசிக்க ஆசைப்படுகிறார்களோ அது முதல் நம்முடைய நலன் பாதிக்கப்படும்.)

இந்தப் புத்தகம் புயலென நமக்கெதிராக எழும்புகிற எந்த முரட்டாட்டமுள்ள மனிதனைவிடவும் நமக்கு நஷ்டத்தைக் கொண்டு வருவதில் ஆபத்தானது. உண்மையாகவோ யாராவது பைபிளை மிகவும் சரியாகப் படித்து நமது சபைகளில் நடக்கிறவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அவன் விரைவில் நம்முடைய போதனைகளிலுள்ள முரண்பாடுகளையும், மிகவும் அதிகமாக அவைகள் வேதத்துக்கு எதிராகவும் இருப்பதைக் கண்டு கொள்வார்கள்.

ஜனங்கள் இதைக் கண்டுணர்ந்தால் சகலமும் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படும் வரை நம்மைத் தொல்லை செய்வதில் ஓய மாட்டார்கள். பிறகு அவர்கள் முன் நாம் கேலிப்பொருளாகவும், உலகம் முழுதும் வெறுக்கப்படுவர்களாகவுமாவோம். மிகவும் ஞானமாக தொல்லைகளைத் துண்டிவிட்டு விடாதபடி அவர்களுடைய கரங்களிலிருந்து பைபிளைப் பிடுங்க வேண்டியது அவசியம்.

(இவ்வாலோசனை 1550-ம் ஆண்டில் போப் ஜீலஸீக்கு அவருடைய கார்டினல்களால் சொல்லப்பட்டது.)

**CHARLIE DI PALMA**

G. தானியேல்

# மாற்கு ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : யோவான் மாற்கு
காலம் : சுமார் 55-70 கி.பி.

## இந்நூல் பற்றி...

1. இந்த சுவிசேஷ நூலை, ஒரு ரோம மனதை தொடும்படியாக ஆசிரியர் வடிவமைத்து எழுதியிருக்கிறார்.
2. இயேசுவின் மரணத்தை தன் நினைவில் கொண்டவராக அவரை பாடுபடும் தேவ ஊழியராக சித்தரித்திருக்கிறார். (மாற்கு . 8:31; 10:33)
3. இயேசுவின் வம்ச வரலாறு, பிறப்பு, அவரின் சிறுபிராய வளர்ப்பு போன்ற செய்திகள் இந்நூலில் இடம்பெறவில்லை.
4. ''உடனே'' என்கிற வினைச்சொல் இந்நூலில் 42 முறை இடம் பெற்ற முக்கிய வார்த்தையாக இருக்கிறது.
5. இயேசுவை, இந்நூலின் ஆசிரியர் ''வல்லமையுள்ள மனிதராக'' வர்ணித்துள்ளார்.
6. இந்நூல் முழுமையும் வரிசைக் கிரமமாக எழுதப்பட்டிருக்கிறது.
7. அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கும், இந்நூலின் ஆசிரியருக்கும் இடையே நெருக்கமான உறவு இருந்திருக்கிறது.

## இந்நூலின் செய்தி

1. இயேசுவின் மரணத்திற்கான 3 காரணங்களில் ஒரு காரணத்தை இவர் தருகிறார்.
    1. அநேகரை மீட்கும் பொருள் 10:45
    2. அநேகரின் பாவ மன்னிப்புக்காக மரித்தார் மத்.26:28
    3. ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறார். யோவான். 10:11
2. இயேசுவை ஒரு மாபெரும் செயல் வீரராக காட்டுகிறார்.

## வேதாகமக் காலத்தைப் போலவே ஞானஸ்நானத்தைப் பெறத் தகுதி பெற்றவர்கள் பெரியவர்களே!

தாங்கள் செய்த பாவத்தின் நிமித்தமே ஜனங்கள் குற்றங்களை சுமந்து, இழந்தோர்களாய் இரட்சிப்பின் தேவையிலிருக்கிறவர்களே தவிர, தங்களின் முன்னோர்கள் செய்த பாவத்தை சுமப்பதினால் அல்ல. குழந்தைகள்,ஆதாம் செய்த மீறுதலை உடையவர்களாக பிறக்கிறார்கள் என்பது உண்மையான உபதேசமல்ல. அப்படியானால், இயேசுக் கிறிஸ்துவும் பாவமுடையவராக பிறந்திருக்க வேண்டும்.

குழந்தைகள் கள்ளம் கபடமற்றவர்கள்

சிறு குழந்தைகளைப் பற்றி ஆண்டவர் பேசும்போது, ''பரலோக ராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது'' என்றார் (மத்.19:20). சிறு பிள்ளைகள், பரம்பரை பாவத்தை சுமந்தவர்களாக பிறந்திருப்பார்கள் என்றால் இயேசு அவர்களைக் குறித்து இப்படிச் சொல்லுவதற்கு மாறாக, ''பிசாசின் ராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது'' என்றல்லவா சொல்லியிருப்பார்.

மரித்த தன் குழந்தையைப் பற்றி பேசும்போது தாவீது, ''நான் அதனிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பிவரப்போகிறது இல்லை''என்றான் (2.சாமு.12:24). தாவீது தன் குழந்தை பாதுகாப்பான ஒரு இடத்திலிருப்பதாகவே உணர்ந்தான். அக்குழந்தை பாவமறியாததாகவே இருந்தது, ஏன் என்றால் தேவனுடைய பிரமாணத்தை அது மீறவில்லை, ''நியாயப் பிரமாணத்தை மீறுவதே பாவம்''(1.யோவா.3:4).

முன்னோர்களின் பாவத்தை சுதந்தரிக்கிறோம் என்கிற தவறான உபதேசத்திலிருந்துதான் குழந்தை ஞானஸ்நானப் பழக்கம் வளர்ந்திருக்கிறது.

ஞானஸ்நானத்தினால் ஒரு மனிதனுக்கு வரும் ஆசீர்வாதங்கள், குழந்தைகளுக்கு தேவையில்லை என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். மூதாதையர்களின் பாவத்தை சுதந்தரிக்கிறோம் என்ற கள்ள உபதேசமில்லை என்றால், குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுவதற்கு நோக்கமேயில்லாமல் போய்விடும். பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஒருவர் இப்படி எழுதியிருக்கிறார் ''கிறிஸ்துவின் மீட்பின் திட்டத்தின் கீழ் மீட்கப்பட்டவர் களாக ஏற்கனவே சேர்க்கப்படுகிறார்கள். ஆகவே சபைக்குள்ளாக இருக்கும் அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் அவர்கள் பங்காளிகளாக மாறுகிறார்கள்'', மற்றொரு ஆசிரியர் கூறும்போது, ''மாறாக, குழந்தை ஞானஸ்நானம் அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்து வந்தது தான்... இயேசு கிறிஸ்து எல்லா இனத்தாரையும், பாலரையும், வயதிலிருப்போரையும் மீட்கிறவராக இருக்கிறார்'' என்கிறார்.

ஞானஸ்நானத்தைப் பற்றி ஜான் வெஸ்லி கூறுகையில், ''குழந்தைகள் ஆதி பாவத்தில் பங்குள்ளவர்களாக இருப்பார்களானால், அவர்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு பொருத்தமானவர்கள் அப்படி பாவமுடையவர்களானால், அவர்கள் ஞானஸ்நானமில்லாமல் தங்கள் பாவத்தை கழுவ முடியாது'' (உபதேச பிரதிகள்.பக்கம்.252)

''குழந்தைகள் மீட்பின் தேவையிலிருந்து, ஞானஸ்நானத்தில்தான், அவர்கள் அதை பெற்றுக்கொள்ள முடியும் என்கிற நிலையிருந்தால், நாம் குழந்தை ஞானஸ்நானத்தில் தவறில்லை என்று கூறலாம். ஆனால் குழந்தைகள் பாவத்தோடு பிறப்பதில்லை என்பதை ஏற்கனவே பார்த்துவிட்டோம். வேதாகமத்தில் ஒரு வசனத்தில் கூட குழந்தைகள் ஞானஸ்நானம் பெற்றதை நாம் காண முடியாது.

ஞானஸ்நானத்திற்கு 4 முக்கியமானவர்கள் தேவை

புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் பெறப்போகிறவர்களிடம் 4 காரியங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

1. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவர்களுக்குப் போதித்திருக்க வேண்டும்.
2. இயேசு, தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும்.
3. தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும்.
4. இயேசுக் கிறிஸ்துவின் மேல் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும்.

பிரதான கட்டளையைக் கொடுக்கும்போது, இயேசு கிறிஸ்து இப்படியாக கூறினார்.''நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் (தேசத்தாரையும்) சீஷராக்கி,பிதா,குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளுபடி உபதேசம் பண்ணுங்கள்'' (மத்.28:18,19). என்றார். இவ்வசனம் ஒருவன் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பே சீஷனாக வேண்டும் என்கிறது. ஒரு சீஷன் நிச்சயமாக காரியங்களைக் கற்றுக்கொள்வான். ஆகவே ஞானஸ்நானம் பெறுகிற ஒருவன் ஏற்கனவே விஷயங்களை படித்திருக்க வேண்டும். அது குழந்தைகளால் முடியுமா?

மாற்கு 16:15,16 இயேசுவின் இவ்வார்த்தைகளை கொண்டிருக்கிறது, ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக் கென்று இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கெள்ளுங்கள்...'' (அப்.2:38). அப்போஸ்தலனாகிய பேதுரு திரளான கூட்டத்திற்கு இயே கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தைத் போதித்தார். அவர்களும் அச்செய்தியின் மேல் விசுவாசம் வைத்தார்கள். ஆனால், ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக

அவர்கள் மனந்திரும்புவது அவசியமானதாக இருந்தது. அந்த சூழ்நிலையில், அன்றைய தினம், ''அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்'' (அப்.2:41)

இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்வது மிக முக்கியமானதொரு காரியம்; அவரே இப்படியாக சொல்லியிருக்கிறார். '' மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்'' (மத்.10:32,33) ரோமர் 10:9 இரட்சிக்கப்படுவதற்கு முன் ஒருவன் அறிக்கை செய்தாக வேண்டும் என்று கூறுகிறது. ''கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு. ...'' அடுத்த வசனத்தில் ஏன் நாம் அப்படி செய்ய வேண்டும் என்பதை கூறுகிறார். ...''இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்'' (ரோமர்.10:10) என்கிறார். குழந்தைகள் இப்படிச் சொல்ல முடியுமா?

அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் இந்த நான்கு காரியத்தையும் கொண்ட ஒரு மனமாற்ற சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி; இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு தடையென்ன என்றான். அதற்கு பிலிப்பு; நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான். அப்பொழுது, அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான். அப்.8:35-39.

சிறுகுழந்தைகளுக்கு சுவிசேஷத்தைச் சொல்லிக் கொடுப்பது அரிதான ஒன்று, அவர்கள் அதை விசுவாசிக்கவும் முடியாது. மனந்திரும்பும்படியான பாவங்கள் அவர்களுக்குள் இல்லை, அவர்கள் மனந்திரும்பவும் முடியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களால் இயேசுகிறிஸ்துவை ஆண்டவர் என்று அறிக்கை செய்யவும் இயலாது. இது உண்மையாக இருப்பதால், புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி நாம் குழந்தைகளை ஞானஸ்நானத்திற்குட்படுத்த முடியாது.

*''வீட்டாரும்'' ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்பதைப் பற்றி என்ன?*

நாங்கள் செய்கிற தவறை எப்படியாவது சரி செய்ய வேண்டும் என்ற நினைப்புடன் சிலர் ''வீட்டாரும்'' ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று, ''லீதியாளின் வீட்டார்'' (அப்.16:15) சிறைச்சாலை அதிகாரியின் ''வீட்டார்'' (அப்.16:33), ஸ்தேவனுடைய ''வீட்டார்'' (1.கொரி.1:16)போன்ற வசனங்கள்' எடுத்துக் காட்டுவார்கள். ஆனால், இந்த சம்பவத்தில் சிறு குழந்தைகள் இருந்ததற்கே ஆதாரமில்லை. அப்படியே இருந்தாலும் குழந்தைகளும் ஞானஸ்நானம் செய்யப்பட்டதா என்பதற்கு சர்வ நிச்சயமாக ஆதாரமில்லை. புதிய ஏற்பாடு, எப்படி ஒருவன் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதைப் பற்றி கூறியிருப்பதை வைத்து நாம் குழந்தைகள் ஞானஸ்நானம் பெற முடியாது என்று தான் முடிவு செய்ய முடியும்.

*முதன் முதலில் குழந்தை ஞானஸ்நானம் பற்றி பேசியது யார்?*

கி.பி. 200-ல் டார்டுலியன் (Tertullian) என்பவர்தான் இப்பழக்கத்தை முதன் முதலில் கொண்டுவந்தார்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறிகிறார்கள். ஆனால் மெதடிஸ்ட் எபிஸ்கோபல் சபையின் மிக புகழ்பெற்ற எழுத்தாளர் கூறும்போது,'' டார்டுலியன் என்பவர்தான் சபை வரலாற்றிலேயே முதன்முதலில் குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றி கூறியிருக்கிறார். கி.பி. 200ம் வருஷத்திற்கு முன் இப்பழக்கம் இருந்ததற்கு வேத ஆதாரம் ஒன்றுமில்லை, அநேகர் அப்போஸ்தலர் காலத்திலேயே இப்பழக்கம் இருந்ததாக வாதிடுகிறார்கள். ஆனால், இப்பழக்கத்தை யார் கொண்டு வந்தாலும், அவர்களின் இந்த , வெளிப்பாடுகளும் காரணங்களும் குறை சொல்ல வழி செய்யும் (ஆல்பார்ட்/Albert)

*முடிவுரை*

குழந்தைகள், ஆவிக்குரிய ரீதியில் பாதுகாப்பாகவே இருக்கிறார்கள், அவர்கள் இழந்து போனவர்கள் அல்ல என்பதை இதற்கு மேல் வலியுறுத்த முடியாது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் குழந்தைகள் ஞானஸ்நானத்தைப் பற்றி ஒன்றும் எழுதவில்லை. குழந்தைகளுக்கு ஒருவன் ஞானஸ்நானம் கொடுக்க முற்படும்போது, அவன் கிறிஸ்துவின் உபதேசத்தை புறம்பே தள்ளிவிட்டபின் தான் அப்படி செய்ய முடியும். மார்க்க ரீதியான ஒவ்வொரு பழக்கத்திற்கு எல்லோரும் வேதத்திற்கு தான் அப்படி தங்களை திரும்புவார்களானால் நிச்சயமாக இப்பழக்கம் ஒழிக்கப்படும். கிறிஸ்துவின் சபை, தான் விசுவாசிப்பதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் புதிய ஏற்பாடு என்ன சொல்கிறதோ அதை செய்யத் தான் முற்படுகிறது.

**Bobby Duncan** பாபி டன்கன்

# இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிரோடெழுந்து மகதலேனா மரியாளுக்கும் மற்றமரியாளுக்கும் தரிசனமாகி பிறகு கலிலேயாவிலே தம்முடைய சீடர்களுக்கு தரிசனமாகி பரமேறிச் செல்வதற்கு முன்பாக தம்முடைய சீஷர்களுக்கு கட்டளையிட்டுச் சொன்னது. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன், என்றார். (மத்.28:18-20) வசனம் 19,20 ல் நமதாண்டவர் மூன்று காரியங்களை செய்யும்படி சீஷர்களுக்கு கட்டளைக் கொடுத்திருக்கிறார். இந்த கட்டளை சீஷர்களுக்கு மாத்திரமல்ல. புதிய ஏற்பாட்டின் உபதேசத்தில் (அப்போஸ்தல உபதேசம்) இருக்கிற அத்தனைப் பேருக்கும் இந்த கட்டளைகளை நாம் இப்பொழுது கவனித்துப் பார்ப்போம்.

1. சகல ஜாதிகளையும் சீஷராக்கி:

இங்கே சகல ஜாதிகள் என்று சொல்லப்பட்டிருப்பதை நாம் வாசிக்கிறோம். இதைக் குறித்து அநேகர் மனிதனால் தவறாக பிரித்து வைத்து மனித நேயமே இல்லாமல் கீழ்தரமான எண்ணங்கொண்டிருக்கிற அந்த ஜாதியைக் குறித்து கருத்து நிலவுகிறதைப் பார்க்க முடிகிறது. தேவன் அந்த ஜாதியை குறித்து சொல்லவில்லை. (அப்.17:26) மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணினார் என்று ஆவியானவர் வெளிப்படித்தியிருக்கிறார். உலகம் முழுவதும் ஒரே ஜாதியுண்டு அதுதான் மனுஷ ஜாதி. இந்த சகல மனுஷ ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று ஆண்டவர் கூறியிருக்கிறதை நாம் தெரிந்துக் கொள்ளவேண்டும். எப்படி சீஷராக்குவது? ஒருவன் தன் குருவுக்கு சீஷனாக மாறவேண்டுமென்றால் முதலில் அவன் அந்த குருவைப் பற்றியும், அவருடைய தன்மைகளையும் தெரிந்துகொள்ளவேண்டும். அதற்கு முன்பாக அவன் குருவை முழுமையாய் நம்பவேண்டும். அதைப் போல் ஒருவன் கிறிஸ்துவுக்கு சீஷனாக மாறவேண்டுமென்றால் கிறிஸ்துவைப்பற்றி முழுமையாக தெரிந்துகொண்டு அவரிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும். இதைத்தான் அப்போஸ்தலர்கள் பிரசங்கித்து அநேகரை சீஷராக்கினார்கள். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூட முதலில் சீஷர்களை தெரிந்து கொண்டு தாம் யார் என்பதையும் எதற்காக வந்தார் என்பதையும் தம்முடைய பலத்த

செய்கையினாலே நிருபனம் பண்ணி தேவனை வெளிப்படுத்தினார். தாம் செய்தது போல தம்முடைய சீஷர்களும் அநேகரை சீஷராக்கினார்கள். (அப்: 14:21)

2. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.

ஞானஸ்நானம் எடுத்த மக்களைப் பார்த்து ஞானஸ்நானம் எதற்காக எடுத்தீர்கள் என்று கேட்டால், அவர்களிடத்திலிருந்து அநேக விதமான பதில்களை சொல்வதைக் கேட்கும் பொழுது மிகவும் துக்கமானதாக இருக்கிறது. ஞானஸ்நானத்தின் நோக்கத்தையே அவர்களுக்கு சரியாக சொல்லவில்லை என்பதை அவர்களின் பதில் நமக்கு தெளிவாய் காட்டுகிறது. அநேக பிராந்திய சபைகளின் இதை கண்கூடாகக் காணமுடிகிறது. பிரிவினைக் கூட்டத்து உபதேசத்தையே எப்பொழுதும் குறை சொல்லிக் கொண்டு இருப்பவர்கள் தங்களிடத்தில் குறையிருப்பதை ஏனோ மறந்துவிட்டு பேசிக்கொண்டு இருக்கிறார்கள். நான் அநேக பிரிவினைக் கூட்டத்து மக்களை சந்தித்து சத்தியத்தை சொல்லும்பொழுது புதிய ஏற்பாட்டு சத்தியத்திற்குள் இருக்கும் ஒரு சிலரின் பாவங்களை பட்டியலிட்டு சத்தியத்தை போதிக்கிற இவர்களே இப்படிச் செய்யலாமா? என்று அவர்கள் கேட்கும் அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. அப்பேர்ப்பட்ட மக்களை பொறுமையோடு சத்தியத்திற்குள் வழிநடத்த வேண்டியதாயிருக்கிறது. ஞானஸ்நானம் கொடுக்கவே சிலருக்கு இன்னும் தெரியவில்லை. ஒரு சிலர் வற்புறுத்தி ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். பின்விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை அவர்கள் யோசிப்பதே இல்லை. ஒருவர் ஞானஸ்நானம் எடுக்கும்பொழுது அவருடைய மனநிலை எப்படி இருக்கவேண்டும் என்பதை அப்போஸ்தல நடபடிகள் புத்தகம் நமக்கு படம்பிடித்துக் காட்டுகிறது. சுவிசேஷத்தைக் கேட்டவர்களின் இருதயம் குத்தப்படவேண்டும். நான் ஒரு பாவி என்றும், எனக்காகவும் இயேசு கிறிஸ்து மரித்தார். என் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் கல்லறையை விட்டு உயிரோடெழுந்தார் என்று அவர் மேல் முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும். ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவருக்கும் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பு இல்லை என்று வேதாகமம் திட்டவட்டமாக சொல்லுகிறது. (மாற்கு. 16:16)தங்களுடைய பாவங்களை உணர்ந்தவர்கள் அன்றைய தினம் இரட்சிக்கப்பட்டார்கள். (அப்.2:37-39) (அப்: 8:36-40) முதலாவது சுவிசேஷத்தை சொல்லுபவர்கள் ஞானஸ்நானம் ஏதற்கு ஏன் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்று அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து இதற்கு ஒரு முன் மாதிரியாயிருக்கிறார். அவர் முப்பதாவது (30) வயதில் யோவான் ஸ்நானகன் மூலமாக யோர்தான் நதியில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்தார்.

நன்மை தீமை அறியதக்க பருவம் வந்தவுடனே ஞானஸ்நானம் கொடுப்பது அவசியம் நல்லது. எல்லோரும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டும், என்பது தேவனுடைய சித்தமாகவும் இருக்கிறது. கட்டளையாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேதாகமத்திலே ஞானஸ் நானத்தின் மாதிரியை நாம் தெரிந்துகொள்வது அவசியம் (யோ.3:23-ல்) தண்ணீர் மிகுதியாகத் தேவை (அப்.8:36,38-ல்) தண்ணீரில் இறங்க வேண்டும். (ரோமர் 6:3-5 கொலோ.2:12) அடக்கம் பண்ணப்படுதல், (அப்.22:16) கழுவப்படவேண்டும் (யோ.3:5)மறுபிறவி. (அப்.8:39)தண்ணீ ரிலிருந்து கரையேறுதல். அடுத்தப்படியாக ஞானஸ்நானத்தின் நோக்கத்தை புரிந்து கொள்ளவேண்டும். (கீழ்படிய - மாற்:16:16) (1.பேது.3:21 இரட்சிக்கப்பட ) (அப்.2:38 பாவங்களை கழுவ அப்.22:16) (பரிசுத்த ஆவியின் வரத்தை பெற அப்.2:38 ரோம:8:9,16) (ரோம.5:9 கிறிஸ்துவின் ரத்தத்தோடு சம்மந்தப்பட) (கலா. 3:27 கிறிஸ்துவுக்குள்ளாக) (கலா. 3:27 கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ள) (அப் 2:47; 1.கொரி.12:13 சபைக்குள்ளாக) (ரோமர் 6:3,5 பழைய மனுஷனை களைந்து போட) (புதிய ஜீவனை துவங்க) இதுதான் புதிய ஏற்பாட்டின் கிறிஸ்துவின் மூலமாய் ஆதி அப்போஸ்தலர்களின் மூலமாய் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஞானஸ்நானத்தின் சரியான நோக்கம்.

3. கிறிஸ்து கட்டளையிட்ட யாவற்றையும் ஞானஸ்நானம் எடுத்தவர்கள் கைக் கொள்ளும்படி போதிக்க வேண்டும்.

ஒரு பிராந்திய சபையிலே போதகர்கள் எப்படி உருவாக முடியும்? தானாக உருவாக முடியுமா? வேதாகமம் திட்டவட்டமாக சொல்லுகிறது. போதகர்களை உருவாக்க வேண்டும் என்று. அந்தியோகியா பட்டணத்தில் போதகர்கள் இருந்தார்கள். (அப்.13:1) ஒரு பிராந்திய சபையிலே அதிக காலமாக இருப்பவர்கள் போதிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். போதகனை உருவாக்க வேண்டிய ஒரு கடமை சபையின் ஊழியருக்கு உண்டு என்பதை உணர்ந்ததும் அநேக ஊழியர்கள் சுயநலவாதிகளாக இருப்பதை பார்க்க முடிகிறது. சபையிலே விசுவாச வைராக்கியம் அர்ப்பணிப்பு தன்மையும் முன்மாதிரியும் தேவனுடைய வார்த்தையின் மேல் தாகமுள்ள சகோதரர்களை அடையாளம் கண்டு கொண்டு அவர்களை மேலும் உற்சாகப்படுத்தி அவர்களை போதக சமர்த்தனாக உருவாக்க முன்வர வேண்டும். ஆனால் இன்று நிலைமையே வேறு. சபையைக் காட்டிலும் தன் குடும்பத்தை அதிகமாய் நேசிக்கிற ஊழியர்களும் மூப்பர்களும் உதவிக்காரர்களும் தான் அதிகமாயிருக்கிறார்கள். இப்பேர்பட்டவர்கள் இருக்கும் ஒரு பிராந்திய சபையிலே விசுவாசத்தையும் அன்பையும் ஐக்கியத்தையும் பார்ப்பது அறிதே. முக்கியமான இன்னொரு காரியத்தைக்குறித்து யாக்கோபு கூறுவதை கேளுங்கள். (யாக். 3:1) என் சகோதரரே அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக, என்றுசொல்லுகிறார். இதை அறிந்து அநேகர் தங்களுக்குள் இருக்கின்ற தாலந்தை மண்ணுக்குள் புதைத்து வைத்த

அந்த மனிதனைப் போல இருக்கிறார்கள். நமக்குள் இருக்கும் தாலந்தை நாம் பயன்படுத்த முன்வரவேண்டும். எபிரேய ஆசிரியர் கூறுகிறார். அநேக ஆண்டுகளாக சபையில் இருக்கும் மக்களைப் பார்த்து சொல்லுகிறார் (எபி.5:12) காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பலமான ஆகாரத்தை அல்ல. பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள் என்று அப்பேர்பட்டவர்களின் அவிசுவாசத்தையும் பெலவீனத்தையும் நினைப்பூட்டி நீங்கள் போதகர்களாக வேண்டும் என்ற நோக்கத்தை வெளிப்படுத்துகிறார். போதிக்கப்பட்ட உபதேச வசனத்தை மற்றவர்களுக்கு போதிக்கும்படி அப்போஸ்தலனாகிய பவுல் நற்சாட்சிப் பெற்றுள்ள வாலிபன் தீமோத்தேயு வுக்கு நிருபத்திலே எழுதுகிறார். (2.தீமோ 2:2) நீங்கள் அறிந்திருக்கிற ஏற்றுக்கொண்டிருக்கிற சத்தியத்திலே நீங்கள் உறுதிப்பட்டிருந்தும் உங்களுக்கு அவைகளை எப்பொழுதும் நினைப்பூட்டி நான் அசதியாயிரேன் என்று பேதுரு நினைப்பூட்டுகிறார் (I.பேது.1:12).

ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் வேர் கொண்டவர்ளாகவும், அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்துக்கொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக. (கொலே.2:6) திருவசனத்தை கேட்பது மாத்திரமல்ல கேட்டபடியே செய்ய நாம் முயற்சி செய்ய வேண்டும். கிறிஸ்தவர்கள் தங்கள் சிந்தையை மேலானவைகளை நாடும்படி வைக்கவேண்டும் (கொலோ.3:1-3) ஆனால் இன்று கிறிஸ்தவர்களின் சிந்தை எப்படியிருக் கிறது என்று கேட்டால் பகைகள், விரோதங்கள், மேட்டிமை, பொறாமைகள் நற்கிரியைகள் இல்லாமை, சுயநலம், பொருளாசையாகிய விக்கிரக ஆரதானை, இப்பேர்பட்ட சிந்தைகள் தான் அதிகமாகக் காணப்படுகிறது. இது கிறிஸ்துவின் சிந்தையல்ல. உலகத்தின் சிந்தை, இதற்கு யார் காரணம்? போதிப்பவர்களே காரணம் என்று சொல்லலாம். பொருளாசைப் பாவம் என்று போதிப்பவர் பொருளாசை உள்ளவராயிருக்கிறார். பணஆசை எல்லாத் தீமைக்கும் வேர் என்று போதித்து கொண்டு பணத்தை வட்டிக்கு கொடுத்து வட்டி வாங்கிக் கொண்டிருக் கிறார்கள். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் என்று வேதம் தெளிவாய் சொல்லுகிறது. எத்தனைப் பேர் ஏழைக்கு இரங்குகிறார்கள்? ஒரு சிலரே விசுவாசக் குடும்பத்தார்க்கு நன்மை செய்யக்கடவோம் என்று போதித்து விட்டு நன்மை செய்யவேண்டிய நேரத்தில் ஆலோசனை செய்துக்கொண்டு இன்று இவருக்குச் செய்தால் நாளை இன்னொருவருக்கு செய்யவேண்டும் என்று தட்டிக்கழித்து விடுகிறார்கள். சபையிலே முன் மாதிரியாயிருக்க வேண்டியவர்களே அப்படி இருப்பதில்லை. பாவம் செய்துக்கொண்டே சபையில் போதித்துக்கொண் டிருக்கிறார்கள். இவர்களின் போதனையை மக்கள் காதுகொடுத்து கேட்கிறார்களா? நிச்சயமாக இல்லை.

துணிகரமான பாவத்தை செய்துக் கொண்டுதுணிகரமாக போதித்துக் கொண்டு இருக்கிறார்கள். கடிந்து கொண்டு கண்டனம் பண்ணி, புத்தி சொல்லு என்று வேதம் சொல்லுகிறது. பாவம் செய்தவர்கள் மனந்திரும்பும் சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது. அப்படியும் அவர்கள் மனந்திரும்பவில்லை என்றால் அப்படிப்பட்டவர்களை சபையின் ஐக்கியத்திலிருந்து நீக்க வேண்டும். இது கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தின் உபதேசக்கட்டளை ஆனால் இதை செய்வதே இல்லை. ஆகவே, தான் பாவம் செய்தவர்கள் மேலும் பாவம் செய்ய நாமே காரணமாயிருக்கிறோம். அங்கே கண்டிப்பான போதனையில்லை. ஆண்டவர் இவ்விதமாய் உபதேசம் செய்ய சொல்லவில்லை. கண்டிப்பான உபதேசம் தான் கிறிஸ்துவில் வளர்ச்சியடைய உதவுகிறது. நித்திய ஜீவனுக்கு வழிகாட்டுகிறது. போதனையைக் கேட்பவர்களும் போதகர்களாகுவதற்கு ஆயத்தப்படுத்தப்படுகிறது. போதித்து சகல அதிகாரத்தோடு கடிந்துகொள்ள வேண்டும் என்று பவுல் தீத்துவுக்கு நிருபத்திலே எழுதுகிறார் (தீத்து. 2:15) போதிப்பவர்கள். எதிரியானவன் குற்றஞ்சாட்டப்படாத அளவுக்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்கிறார். கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான் என்று (1.தீமோ.3:1ல்)பவுல் அழகாக ஆணித்தரமாகச் சொல்லுகிறார். இந்த கண்காணியை மூப்பன் என்றும் மேய்ப்பன் என்றும் வேதம் சொல்லுகிறது. மூப்பனுடைய தகுதியைக் குறித்தும் திட்டவட்டமாக சொல்லுகிறது. அதில் போதக சமர்த்தனும் குற்றஞ்சாட்டப்படாதவனும் இழிவான ஆதாயத்தை இச்சிக்காதவ னுமாயிருப்பது அவசியம். குற்றம் சாட்டப்பட்ட ஒரு மூப்பனை சபையிலே அனுமதித்து அவர்பயமில்லாமல் போதித்துக்கொண்டே யிருக்கிறார். இதை சபையார் அனைவரும் எதிர்க்காமல் முகதாட்சணியம் பார்த்துக்கொண்டு அவருடைய போதனையை கேட்டுக்கொண்டிருக்கி றார்கள். ஆனால்இதை தேவன் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதனால் சபையில் பக்திவிருத்தியடைவதற்குப் பதிலாக பாவம்தான் அதிகரிக்கும். போதிக்கப்படுபவர்கள் ஆண்டவருடைய போதனைகளை கேட்பவர்கள் அதைக் கைக் கொள்ளும் அளவுக்கு கண்டித்து உணர்த்தி போதிக்க வேண்டும்.

பவுல் கூறுகிறார் (1.தெச.4:2) கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே ஆகையால் சகோதரரே,நீங்கள் நிலைகொண்டு வார்த்தையினாலாவது நிருபத்தினா லாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளு ங்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்பு; கூர்ந்து நித்திய ஆறுதலையும் நல் நம்பிக்கையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங் களைத் தேற்றி எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக. (2.தெச. 2:15-17).

ஜோசுவா செல்வம்

# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45-9.00 p.m.<br>9.00 - 9.15p.m. | Box.3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun,Mon,<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m | Box.80<br>Kakinada-533001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 -7.00.p.m.<br>5.45 -6.00.p.m.<br>5.30-5.45 p.m. | Box.8405<br>Bangalore-560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum-695034 | Sunny David |

***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவசப் பயிற்சி,**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண்–27, காங்கேயம் – 638 701.
தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**